சுன்னாகம், மன்மத புரட்டாதி ௯ ✵ (25 – 9 – '55) ஞாயிறு

# ஈழகேசரி

EELAKESARI – NATIONALIST TAMIL WEEKLY

மலர் 26 இதழ் 13 | தேசிய வார வெளியீடு ○ நிறுவியவர் : நா. பொன்னையா. | தனிப் பிரதி சதம் 10

JAFFNA COLLEGE LIBRARY 26 SEP 1955 VADDUKODDAI, CEYLON

★ இந்நாட்டின் மொழி ஐக்கிய சமுதாயத்தை மக்களிடையே இணைக்கும் வகையில் அமையவேண்டும். ஒரு நாட்டின் மொழிக்கு அதற்குரித்தான மதிப்பை அளிக்காவிடில் அத்தேசம் விடுதலையடைந்ததாகாது.

சாம்பசிவம் அன்ட் கோ.
38, கஸ்தூரியார் வீதி : பெரியகடை : யாழ்ப்பாணம்

H. M. V. ரேடியோ, கிராமபோன், ரெக்கோட்டுகள் விற்பனைக்கிருக்கின்றன.

N. Sambasivam & Co.,
38, Kasthuriar Road : Grand Bazaar : JAFFNA

# வேலைநிறுத்தம் முடிந்தது; ஆதரவுக்கு நன்றி

## தகராறு முற்றிலும் தீரவில்லை

## மொழிச் சிக்கல்பற்றித் தலைவர்கள் இரசமான வாதப் பிரதிவாதங்கள்

கொழும்பு, 21-9-55

ஏறத்தாழ ஒரு மாதகாலமாக நடைபெற்ற சினிமா ஊழியர் வேலைநிறுத்தம் முடிவடைந்துவிட்டது. வேலைநிறுத்தம் நடைபெற்றபடமாளிகைகளின் வாசலிலேநின்று மறியல் செய்தவர்கள் இப்போது தங்கள் 'மறியல் வேலையை' நிறுத்திக் கொண்டனர். தங்களுக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் அநீதியைப் படம்பார்க்க வருபவர்களிடம் முறையிட்டுப் பொதுமக்களின் தீர்ப்பை வேண்டிநின்ற தொழிலாளர்களின் கையிலே தாங்கிய அட்டைகளில உள்ள சுலோகங்கள் இப்போது மாறிவிட்டன. 'கருங்காலிக் காட்சிகளைப் பகிஷ்கரியுங்கள்' எனப் பொதுமக்களை வேண்டிய தொழிலாளர்கள் "வேலைநிறுத்தம் முடிந்தது; ஆதரவுக்கு நன்றி" என்று வேலை நிறுத்த ஆதரவாளர்களான பொதுமக்களுக்குத் தமது நன்றியறிதலைத் தெரிவிக்கிறார்கள்.

### நீண்டு சென்றது

சிலோன் தியேற்றர்ஸ் படக்கம்பனியின் ஊழியர்களில் 13பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டமையை எதிர்த்து நியாயம்கோரி நடைபெற்றதான இவ் வேலை நிறுத்தம் அரசாங்கத்தின் தொழிலமைச்சின் தலையீட்டால் ஒரு சமரசமான உடன்பாட்டுக்கு வந்துவிட்டது. தொழிலமைச்சு எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் இரு சாராரும் விட்டுக்கொடுக்காது பிடிவாதமாக நின்றமையால் இதுவரை இவ் வேலைநிறுத்தம எல்லையற்று நீண்டு சென்றது. தொழிலாளருக்குக் கைகொடுத்து ஆதரவு தந்த பொதுமக்களை அலுப்படைந்துவிட்ட நோத்தில இவ் வேலை நிறுத்தம் இன்னும் அவர்களது பொறுமையைச் சோதிக்காமல் முடிவடைந்திருக்கிறது.

### முற்றிலும் தீரவில்லை

எனினும முதலாளிகளுக்கும் தொழிலாளருக்குமிடையில உள்ள தகராறு முற்றிலும் தீர்ந்துவிடவில்லை. இத்தகராறறைத் தீர்த்து வைப்பதற்குத் தொழிலமைச்சின உத்தியோகத்தர் ஒருவர் மத்தியஸ்தராக நியமிக்கப்படுவார். மேற்படி 13 பேரையும் வேலைநீக்கம் செய்தது நியாயமா அன்று என்பதை இம்மத்தியஸ்தர் விசாரணை செய்து தீர்ப்பளிப்பார். இவரது தீர்ப்பை ஒப்புக் கொள்வதென இரு சாராரும் சம்மதம தெரிவித்திருக்கிறார்கள். வேலை நீக்கம் செய்தது நியாயமானதெனக் கண்டால் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலாளிகள் எவ்வளவு நட்டஈடு கொடுக்க வேண்டுமென்பதையும் அம் மத்தியஸ்தரே தீர்மானிப்பார். அத்துடன் வேலை நிறுத்தம் செய்தவர்களை விலக்கும் நோக்கத்துடன் அளிக்கப்பட்ட வெளியேற்ற அறிவிப்புக்கள் நீக்கப்பட வேண்டுமென்ற தொழிலாளர் கோரிக்கைக்கு முதலாளிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

### ஒரு விலங்கம்

வேலை நிறுத்தத்தினல் ஏற்பட்ட இன்னெரு விலங்கம புதிய சிக்கலகளுக்கு மூலகாரணமாக அமையலாமோ என அஞ்சப்படுகிறது. வேலை நிறுத்தத்தின் போது சிலோன் தியேற்றர்சாருக்குச் சொந்தமான சில படமாளிகைகள் மூடப்பட்டு விட்டன. எனவே தான் அவற்றில் வேலை செய்த தொழிலாளர்கள் வேலையில்லாதவர்களாக ஆக்கப்பட்டு விடுவார்கள். இப்படியானதொரு நிலைமை உருவாக்கப்படுமாஞல் வேலையிழக்க விருக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு மாத முன்னறிவித்தலோ, இன்றேல் ஒருமாத வேதனமோ அளிக்கப்படுமென முதலாளிகள் தெரிவித்துள்ளனர். இப்படி வேலையிழக்கும் தொழிலாளரையிட்டு ஏதாவது அநியாயம் இழைக்கப்படுமாஞல், அவசியம் நேரிட்ட போது இன்னெரு வேலை நிறுத்தத்தின்மூலம எதிர்ப்பைத் தெரிக்கத் தொழிலாளிகள் முன்வருவார்களாம்.

### இடங்கிடைக்குமா?

ஐக்கிய நாடுகள் சபையிலே இலங்கையும் இடம் பெறக்கூடிய அறிகுறிகள் தோன்றத் தொடங்கியுள்ளன. உலக சமாதான அமைப்பான ஐ. நா. சபையில் இடம் வகிக்க வேண்டுமென்ற இலங்கையின் பலநாளைய ஆசை இதுவரை பலிதமாகாமல் இருந்துவந்திருக்கிறது. மேற்குநாடுகளுட் பல இலங்கையின் அங்கத்துவத்துக்கு ஆதரவு தந்திருந்தும் கூட ருஷியா இதற்குச் சம்மதிக்காததால் இலங்கை ஐ. நா. சபையினுள் நுழைய இயலாது

(தொடர்ச்சி 7ஆம் பக்கம் பார்க்க)




## மீன்பிடிகாரருக்கு வீடுகள்

### நாட்டிலே தேர்தற் பரபரப்பு

கிழக்குத்தபால் : : : ஊரி

மட்டக்களப்பு, 21-9-55

மட்டக்களப்பு வாவியிலும், நீண்ட கரைசார்ந்த கடற்பரப்பிலும் மீன்பிடிக்கும் தொழிலாளருக்கு வேண்டிய வசதிகளைப் பெற்றுக் கொடுத்தற்காக அங்கங்கே மீன்பிடிச் சங்கங்கள் மட்டக்களப்பிலும் அமைக்கப்பெற்றுள்ளன. இச் சங்கங்கள் மூலம மீன்பிடிகாரர் தமக்கு வேண்டிய நன்மைகள் பலவற்றைக் காலத்துக்குக் காலம் பெற்றிருக்கிறார்கள். நெற்செய்கைக்கடுத்தபடியான பெரியதொரு தொழிலாய் நாட்டின் பொருளவளத்தினை உயர்த்துவது மீன்பிடித்தற் தொழிலேயாதலால் இதிற் சம்பந்தப்பட்ட பரதவர் குல மக்களது வாழ்க்கை நலம அரசியல் வாதிகளுடைய கவனத்தைச் சிலகாலமாக மிகுதியும் கவர்ந்துவருகிறது. இங்குள்ள மீனபிடிச் சங்கங்கட்குப் பொதுத் தலைவராய் இருக்கும் வழக்கறிஞர் திரு. ஆ. தவராசா அவர்களின வேண்டுதற்படி மீன்பிடிகாரருக்கு அரசாங்கம வீடுகள் கட்டிக்கொடுக்க முன்வந்திருக்கிறது. உதவி அமைச்சர் திரு. வ. நல்லையா அவர்கள் இவ்வாரம வந்து நேரில் இடந்தொறும் சென்று நிலைமையை அவதானித்துள்ளார்கள். இங்குள்ள ஏறக்குறையப் பத்துச் சங்கங்களுக்கு பல ஆயிரம ரூபாய் பெறுமதியான [illegible] வழங்கப்படவுள்ளது. தற்காலிக போக்குவரத்து அமைச்சர் [illegible] அவர்களும் இக்குழுவினருடன் சென்று மக்களின வாழ்க்கை நிலைமையை அறிந்து, அவர்களின் இடங்களுக்குச செல்லும் தெருக்களை நன்கமைத்துத் தருவதாக உறுதிகூறிச் சென்றிருக்கிறார்.

### பாரதி தினவிழா

தமிழ்க் கலை மன்றத்தினர் இவ்வாரம் பாரதி விழாவினை வழமைபோல் நன்கு நடத்தினர். மன்றத்தின் உபதலைவர்களுள் ஒருவரான திரு. ம. சி. மயிலவாகனம் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்திற் காரியாதிகாரி திரு. பி. தேவேந்திரம்பிள்ளை, பண்டிதர் க. சந்திரசேகரி, திரு. வே. சாமித்தம்பி ஆசிரியர் ஆகியோர் ஆற்றிய விரிவுரைகள் பாரதி யுகத்தை மக்களுக்குப் பெரிதும் நினைவூட்டின. இசைமணி திரு. நா. இராசா பாரதி பாடல்களை இடைக்கிடை முழக்கினர். பேச்சாளர்கள் பாரதியாரை ஒரு அரசியல்வாதியென்றும், இலக்கியப் புலவர் என்றும், வேதாந்தி என்றும தனித்தனி ஆராய்ந்து காட்டினமை மிகுதியும் நயம பயப்பதாயிருந்தது.

### பெண் தொண்டர்கள்

சமூக இயல் அறிவினை நாட்டில் வளர்த்தற்காக அரசினர் சனசமூக நிலயங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்குக் காலத்துக்குக்காலம் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருதலறிவோம். இங்குள்ள சிற்றூண்டியில் இதற்கென அமைந்த நிலையம இம்முறை முற்றும் பெண்களுக்கென்றே ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மனையியல், மகளிர் பண்பு, தையற்கலை என்பன போன்ற அரிய விஷயங்கள்பற்றி வகுப்பு வேளைகளில் விரிவுரைகள் ஆற்றப்பட்டன. புதிய சமையல்முறைகள், காலத்துக்கேற்ற தையல் வேலைகள், குழந்தை வளர்ப்பு என்பனபோன்றவற்றில் பயிற்சிகளும் அறிந்தோரால் செய்து காட்டப்பெற்றன. திருமதிகள் கந்தையா, உலகசேகரம், டானியல்ஸ், பெரியதம்பி ஆகியோர் இவ்வகுப்புகளிற் பங்கு பற்றிய மகளிரின் நேரத்தைப் பயனூட்டினர். 'பாடங்கள் ஒருபாலாக, பல இடங்களில் இருந்து வருவோரும், ஒருங்கு கூடி உறவாடிச் செல்லுதலும் இதனல் நாங்கள் பெறும் பெரும்பயனாகும்' என்று பல இடத்து மகளிரும் மகிழ்ந்து எம்மிடம் கூறினார்கள்.

### அரசியல் அலை

அடுத்த பொதுத்தேர்தல் பெப்ரவரியில் நடக்கும் என்ற பரபரப்பு மக்களிடை இங்கு ஏற்பட்டுள்ளது. எந்தக் கட்சியையும் சார்ந்து நில்லாது கடந்த காலங்களிலே தேர்தலில் போட்டியிட்ட நிலைமை மாறிக் கட்சி அடிப்படையில், வேண்டுவோர் முன்வருதல் வேண்டும் என்ற தலைப்பில் மட்டக்களப்பு மைதானத்திலே 19-9-55இல் ஒரு பொதுக் கூட்டம் நடந்தமை குறிப்பிடத் தக்கது. இதனை நடத்தியோர் தமிழரசுக்கட்சி ஆதரவாளராவர். கட்சி அடிப்படையிலேயே போட்டி இடுதல் வேண்டும் என்பது சரியானலும் இந்த மனநிலையை மக்கள் இலங்கையிலே இந்நாட்களிற் பெறுவார் என்பதற்கில்லை. மட்டக்களப்பினைப் பொறுத்த வரையில் இது இன்னும் வெகு காலம் செல்லக்கூடியதென்றே கூறவேண்டும்.

வெளிவந்துவிட்டது!

6ஆம் வகுப்புக்குரிய

மொழிப் பயிற்சி

~~ ஐந்தாம் புத்தகம் ~~

பண்டித வ. நடராஜன்

எழுதியது

விலை : ரூபாய் 1-20 :: தபாற் செலவு 35 சதம்

சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது வாசிகசாலை

# நற்றமிழ் என்பது யாது? *

நாவலர் சோமசுந்தர பாரதியாரின் நிரம்பிய புலமையும், செறிவுள்ள தமிழ் நடையும், உளமார்ந்த தமிழ்ப்பற்றும் தமிழ்நாடறிந்ததே. இப் பண்புகளொருங்கமைந்த வளமார்ந்த உள்ளத்தில் இருந்து அவ்வப்போது பத்திரிகைகள் மூலமாகவும் வானொலி மூலமாகவும் வெளிவந்த இனிய கட்டுரைகளை நூலாகத்தொகுத்து மலர் நிலையத்தார் வெளியிட்டுள்ளனர்.

நற்றமிழ் என்பது மூதற் கட்டுரை. அதில் நற்றமிழின சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டி நற்றமிழ் நடை எவ்வாறு அமையவேண்டுமென அவர் காட்டிய வழிகள் இன்றைய தமிழருக்கு அவசியமானவை. காலத்தானும், இடத்தானும். கருத்தானும் வேறுபடாது என்றும் ஒருமைத்தாய், கற்றவரால் பேசவும் எழுதவும் படுவதாயுள்ள கட்டளைத் தமிழே நற்றமிழ் என்பது ஆசிரியர் கருத்து. அவசியமான பிறமொழிச் சொற்களையெல்லாம் தமிழ் வரம்புக்குட்பட எடுத்து உபயோகித்துத் தமிழ் மொழியை வளப்படுத்த வேண்டும் என்பதே இவர் கருத்துமாகும். புதுக் கருத்துக்களும் செயல்களும் உருவாகும இக்காலத்தில் இது அவசியமேயாகும்.

எது தமிழ் இலக்கியம், இலக்கியத்திற புதுமைகள் எனனும் பகுதிகள இலக்கிய அறிஞர்க்கும, விமாசகர்கட்கும தக்க பீடிகையாகும. தாய்மொழியில் உயர்தரக் கல்வி போதிக்க வேண்டிய அவசியத்தையும அது அனுகூலமாகும முறையையும, அதனைச செயற்படுத்தக் கையாளவேண்டிய வழிகளையும ஆராய்ந்துள்ளமை இன்றைய அரசியலார் கருததுக்குரியன.

பெண்மை என்பதன் தத்துவத்தைப பலதுறை நோக்கியும ஆராய்ந்து அவர்களிடம பரப்பின அமைந்த நல்லியல்பை எடுத்துக்காட்டிப் பெண்ணினத்தைப் பெருமைப்படுத்துகின்றூா.

பெண்மை நலமும புலமையறமும் எனற கட்டுரையில நாவலா, ஒரு சிறந்த நீதியரசராய் நினறு கம்பா தந்த வாககுமூலத்தைக் கொணடு அகலிகையின் கறபு மாசுபடாததெனக கூறும தீாப்பு வாசகா உள்ளததுக்கு இனபந தருவதாகும,

பாரதியாருடன் பழகிய மையைக்கொணடு அவரின அரும பெருங் குணஙகளையும வாழ்க்கையின இரசமான சமபவங்களையும் வரைந்துள்ளாா. இங்ஙனம சிறந்த கருத்துக்களை இறுக்கமான தமிழ நடையில தந்துளளாா. தமிழா இவர்தம தமிழ்ப் பணிக்கு ஊக்கந் தருவாாகளாக!

—நா. க,

தமயந்தி திருமணம்: பண்டிதர் சோ. இளமுருகனர்; நவாலி, மானிப்பாய்; விலை ரூ. 1-50.

தமிழ் என்ற குளத்திலே நல்வசனங்களாகிய இலைகளுக்கிடையே தோற்றும புதிய பழைய பாட்டுக்களாகிய மலர்களுடன் திகழ்கின்றது தமயந்தி திருமணம். புலவர் பரம்பரையைச் சேர்ந்தவராகிய ஆசிரியர் இளமுருகனர் கவி இயற்றுவதோடு வளமார்ந்தவசன இலக்கியமும்படைக்க வல்லவர் என்பதை இந்நூல் காட்டுகிறது. இந்நூலின் வணக்கப் பகுதியில் வரும் கலைமகள்மீது பாடப்பட்ட பா, சொல் நயமும் பொருள் நயமும் மிக்கது

அன்ன மனுங்க
அழகு மயில்துனிய
வன்ன வரிக்குயில்கள்
வாய்மூட—மன்னும்
நடையாள் வனப்பு
நலத்தாள் தமிழின்
தொடையாளென்
னுள்ளச் சுடர்.

தமிழன்னையாம் கலைமகளின் நடைக்கு அன்னம்தோற்றுவிடுகிறதாம். அழகுக்கோ மயில் தோற்று மறைகிறதாம். தொடைச் சிறப்புக்கோ இன்னிசை மிழற்றும் குயிலே தோற்று வாயிழக்கிறதாம். இவ்வருமைப் பாடலின் போக்குப் போலவே இந்த நூலின் வசனங்களும் அமைகின்றன. இந்த நூலின் பாயிரத்தில் எடுத்ததற்கெல்லாம் கேள்வி தொடுக்கும் கவி மரபறியாதோருக்கு ஆசிரியர் நல்லறிவு புகட்டுகிறுர். வாய்மை கடைப்பிடித்தல் என்ற பொன்னிழை எங்ஙனம் கதை நிகழ்ச்சிகளாகிய மணித்துளைகள வழிச் சென்று காப்பிய மணி மாலையாக அமைவதை இவ்வாசிரியர் விளக்கியுள்ளார். வித்து முளையரும்பி, இலை கொண்டு பயிராகி, பொத்தி கட்டிக் கதிரீன்று, அது முற்றி அதன் பயன் உணவாய்க் களிப்புத்தரும் முறையில் நாடக இலக்கணத்திற் கூறப்படும் முகம், பிரதமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் எனும் ஐந்தினையும இவ்வாசிரியர் விளக்கிப் புது முறையிற் காப்பியப் பணபினை நன்கறிவுறுத்துகிறுர். இந்நூலுக்கு இப்பகுதி தனியழகுடன பொலிகிறது.

நூலினுட் புகுந்தால் கடலுட் புகுந்து முத்தைப் பெறல் போலவும் நிலத்தை ஆழ்ந்து கல்வி ஒளி மிக்க அரதனம் எடுப்பதுபோலவும் பல நலங்களை அனுபவிக்கலாம். குழந்தைகளை இவ்வாசிரியர் கடவுளின் அருள் வடிவங்கள் என்கிறுர். ஊசல் வரியில் வரும் 'எண்ணுர் குதன்போல் இனிக்கின்ற பண்பாளன்' என நளன் மாண்பைக் குறளின் பண்பிற்கு உவமிக்கிறுர். குழந்தைகளுக்கேற்ற வகையில் இவ்வாசிரியர் உவமைகள் அமைக்கிறுர். 'அன்னம் பாலையும் நீரையும் பிரிப்பதுபோல எங்கள் காதலையும் சாதலையும் ஒன்றுக்காது பிரித்தே வைக்கும்' என்ற வரியில் ஆசிரியர் சிந்தனை...

(தொடர்ச்சி 10ஆம்பக்கம் பார்க்க)

*நற்றமிழ்: ஆசிரியர்: நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்; வெளியீடு: மலர்நிலையம, 113, பிராட்வே, சென்னை-1; விலை ரூ. 2-0-0.



C. C. C. பண்படுத்தும்
புகையிலைப் பசளை
கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிட்
தபாற்பெட்டி 33 :: :: கொழும்பு.
C. C. C. பசளை கிடைக்குமிடங்கள்:-
சுன்னுகம் — R. M. கான்பாய் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம் — M. S. மணியம் அன்ட் கோ
ஊர்காவற்றுறை — கைற்ஸ் டிஸ்ரிபியூரேர்ஸ்


# கேள்வி மண்டலம்

## குள்ளனுர்

குள்ளனுருக்குக் கேள்விகள் எழுதி அனுப்புவோர் தங்கள் பெயரையும் விலாசத்தையுங் குறிப்பிடவேண்டும். சொந்தப் பெயர் வெளிவருவதை விரும்பாதவர்கள் புனை பெயர் ஒன்றினைக் குறிப்பிடலாம். ஆனுல் கேள்விகளுடன் உண்மைப் பெயரும் விலாசமும் எழுதி அனுப்புதல் வேண்டும். ப-ர்.

க. நாகமணி, கல்முனை

கேள்வி: எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் ஒருவர் இருக்கிறுர். அவர் ஆடுவார், ஓடுவார், பாடுவார், சாடுவார். அவரை என்ன செய்வது?

மறுமொழி: பாரதி பரம்பரையில் உதித்த ஒருவரைக் கண்டுபிடித்து அவர்மூலம் அப் பாடகரைத் தமிழகத்துக்கு அறிமுகம் செய்து வைக்கவேண்டும்.

புரட்சி வீரன், ஏறவூர்

கே. கதாநாயகனின் உள்ளம் எதைப்போன்றது?

மறு. இதற்குக் கதாநாயகியின் உள்ளத்தைப் பிளந்து பார்க்கவேண்டும்.

எம். எஸ். ஆரிபின், அக்கரைப்பற்று

கே. ஈழகேசரியைப் படிக்கும்போது ஒருவித உணர்ச்சி எற்படுகிறது. அது ஏன்?

மறு. நீர் உணர்ச்சிவசப்படுவதால்.

க. பூபாலசிங்கம், நல்லூர்

கே. குடும்பத்திற் சச்சரவேற்படுவதேன்?

மறு. கணவனும் மனைவியும் தத்தமக்குள் சில காரியங்களை இரகசியமாகச் செய்துகொள்வதால்.

கே. சதா, மட்டக்களப்பு

கே. இன்றைய அரசியற் சச்சரவை எதற்கு ஒப்பிடலாம்?

மறு. வெற்றெலும்புத் துண்டுக்குச சண்டையிடும்நாய்களுக்கு.

கா. இரகுநாதன், நாயன்மார்கட்டு

கே. இன்னும் 30 வருடங்களுக்குத் தங்கள் கட்சி ஆட்சியிலிருக்குமென இடிமுழக்கம் செய்யும் அரசியல் வாதிகளை எதற்கு ஒப்பிடலாம்?

மறு. பெரு வெள்ளத்தில் மூழ்கும் ஓலைக் குடிசைகளுக்கு.

எம். எஸ். வீ., மட்டக்களப்பு

கே. காதல் எத்தகையது?

மறு. கை விலங்கைப் போன்றது.

அ. இராசேந்திரம், முதலாம் வட்டாரம், மூதூர்

கே. இன்றைய ஆட்சியைப் பற்றித் தங்கள் கருத்து யாது?

மறு. அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்தராத்திரியிற் குடைபிடிப்பான் என்பார்களே! அதே கதை போன்றது.

கா. சிவசம்பு, சந்தையடி, சாவகச்சேரி

கே. கடவுளைத் திரும்பிக் கூடப் பாராதவர்கள் முதலாளியைக் கும்பிடுவதேன்?

மறு. முதலாளி படியளப்பதால்.

எஸ். இரத்தினசிங்கம், அரசினர் சிரேஷ்ட பாடசாலை, தர்கா நகர்

கே. கடவுள் எங்கே இருக்கிறுர்?

மறு. தூணிலுந் துரும்பிலுமிருக்கும் கடவுள் இன்று தங்கத்திலும்வெங்காயச் சங்கத்திலுமிருக்கிறுர்,

கே. யாழ்ப்பாணத்திற் பல ஊர்களின் பெயர், துறை, பாய், வேலி என முடிவதேன்?

மறு. துறையில் உழைத்தும், பாய் இழைத்தும், வேலியடைத்தும் பிழைக்கும் மக்கள் அதிக தொகையினராய் இருப்பதாற் போலும்.

கே. சதாசிவம், மட்டக்களப்பு

கே. இப்போது உலகிற் பெருகி வருவது என்ன? சண்டையா? சமாதானமா?

மறு. சமாதானம் நிலைக்ச் செய்யும் திருப்பணியில் அணுக்குண்டு சலவாயுக்குண்டுச்சண்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலையிற் சமீபத்தில் நடைபெற்ற சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் நினைவுவிழாவில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய விரிவுரையின் சாரம் இது. கேட்டெழுதியவர் : 'கதிர்'

# தாமோதரம்பிள்ளை

## 'தமிழ்ச்சுடர்மணிகள்' தரும் உண்மை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

— 2 —

### தொல்காப்பியப் பதிப்பு:

"இனி காடு நாடாயிற்று ஆகலின் நூல் வல்லாரைக் கொணர்க" என்று பாண்டியன் தன் அதவலை அனுப்ப அவர்கள் நாற்றிசையும் சென்று தேடி எழுத்தும் சொல்லும் வல்லாரையே கொணர்ந்தனர். பொருளறிந்தோர் எங்கு தேடியும் அகப்படவில்லை. இதனால் மனங்கவன்ற பாண்டியனது துயரத்தை நீக்குவதற்காக ஆலவாயின் அவிர்சடைக்கடவுள் 'களவியல்' செய்து கொடுத்தான் என்று இறையனார் அகப்பொருளுரையில் வருவதை வைத்துக்கொண்டு அக்காலப் பண்டிதர்கள் தொல்காப்பியம் பொருளதிகாரத்தை அன்னம், அசுணமாவரிசையில் சேர்த்துவிட்டனர். யாராவது தெரிந்தோ தெரியாமலோ, "எங்கோ ஓர் இடத்தில் பொருளதிகாரம் தலையும்—வாலுமின்றிக் கிடந்ததைக் கண்டேன்" என்று சொல்லிவிட்டால் இக்களவியலுரையைப் புலவர்கள் காட்டி அப்படி ஒரு பண்டம் இல்லை என்றே சாதித்தனர். இப்படிப்பட்ட நிலையிலே ஒரு நாள் 1885 ஆம் ஆண்டு தொல்காப்பியம் பொருளதிகாரத்தை ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளை அச்சிட்டு வெளியிட்டார். காணுதலைக் கண்டு புலவர்கள் ஆரவாரித்தனர். ஆதீனங்கள் ஆசீர்வதித்தன. 'நீடிய சீர்பெறு தாமோதர மன்ன! நீன் புவியில் கோடி புலவர்கள் கூடினும் நின்புகழ் கூறரிதே' என்று அறிஞர்கள் வாழ்த்தினார்கள்.

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையுடன் ஏற்கெனவே மழவை மகாலிங்கையர் வெளியிட்டிருந்தார். அந்தப் பதிப்பைப் பார்த்த யாரும் இப்போது அதை நூல் என்று ஒப்புக்கொள்ளார். ஏட்டுக்கும் அதற்கும் ஒரு வித்தியாசமுமில்லை. என்றாலும் ஏட்டிலிருந்து புத்தகமாக வந்தது ஒரு விசேஷந்தான். இதன்பின் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தைச் சேனாவரையர் உரையுடன் ஆறுமுகநாவலர் மேற்பார்வையில் சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப்பித்தார். இப்போது பொருளதிகாரத்தையும் அவரே வெளியிட்டபடியால் படிப்பவருக்கு உபகாரமாக தொல்—எழுத்ததிகாரத்தையும் தாமே பதிப்பித்து தொல்காப்பியம் என்றால் தாமோதரம்பிள்ளை என்று சொல்லும்படியாக அவர் தமிழன்னைக்குச் சூட்டினார்.

ஆனால் இந் நாட்டிலிருந்த புலவரொருவர், தாமோதரம்பிள்ளைக்குச் சேரவேண்டிய புகழை மறைத்து அதற்கு முன்பே தொல்காப்பியம் வேறொருவரால் அச்சிடப்பட்டிருந்தது என்று தொனிக்கும்படியாக எழுதியிருந்ததை எதிர்த்துப் போராட நான் பல வருஷம் செலவழிக்க வேண்டியிருந்தது. தொல்காப்பியம் மாத்திரமன்று, வீரசோழியம் (1881), தணிகைப் புராணம் (1883), சூளாமணி கலித்தொகை (1887), இலக்கணவிளக்கம், இறையனார் அகப்பொருள் (1889) இவற்றையும் வெளியிட்டார்.

### ஐயரும் பிள்ளையும்:

தாமோதரம்பிள்ளையவர்கள் பிறந்த ஆண்டு 1832. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்த ஆண்டு 1822. டாக்டர் உ. வே. சாமிநாதையர் பிறந்த ஆண்டு 1855. அவர் குருவான மீனாட்சிசுந்தரம்பிள்ளை பிறந்த ஆண்டு 1815. இவற்றை ஞாபகம் செய்துகொண்டால் இனி நான் சொல்லப்போகும் விடயங்களை விளங்கிக்கொள்வது சுலபமாகும். ஐயர் அவர்கள் தமது குருவாகிய மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களுக்கு ஒரு சரித்திரமும் தமது சுயசரித்திரமும் ஆக இரு பெரும் நூல்கள் எழுதியுள்ளார்கள். 1887ஆம் ஆண்டில் இறந்த தமது குருவாகிய மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் சரித்திரம் அவர் இறந்து 45 வருடங்களின் பின்தான் வெளிவந்தது. காரணம் என்ன தெரியுமா? அந்த நூலிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களை வேண்டுமென்றே ஐயர் அவர்கள் குறைவாக எழுதியிருந்தார்கள். (எப்படி எழுதியிருக்கிறார், ஏன் எழுதினார் என்பதை முன்பே பலமுறை கூறியுள்ளேன்) அதை அப்படியே வெளியிடத் தடைகல்லாக அப்போது சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அவர்கள் இருந்தார்கள். புலவர் அவர்கள் இறந்தபின் யாழ்ப்பாணத்திலே ஐயரைத் தட்டிக் கேட்க ஒரு பிராணியாவது இல்லை. எனவே துணிந்து வெளியிட்டார்கள். எனினும் நாவலர் அவரது பெருமகனும், நாவலர் வித்தியாசாலை மனேஜருமாகிய த. கைலாசபிள்ளை அவர்கள், 1860ஆம் ஆண்டு வெளியிட்ட திருக்குறளுக்கு 1864ஆம் ஆண்டு சந்தித்த மதுரை இராமசாமிப் பிள்ளையைக்கொண்டு அணிந்துரை வாங்கிய 'போலிக் கதையை' அலசி—ஆராய்ந்து மறுத்து ஐயருக்கே எழுதிவிட்டார். இது நிற்க த. கைலாசபிள்ளை அவர்களும் இறந்தபடியால், 'என் சரித்திரத்தில்' ஐயர் மனம்போனபடி எழுத வாய்ப்பு ஏற்பட்டது. இப்படி ஐயரவர்கள் நாவலரைப் பற்றியும்—யாழ்ப்பாணத்துப் புலவர் பெருமக்களைப் பற்றியும் எழுதி வைத்திருக்கிறார் என்று 1922 ஆம் ஆண்டிலே எனக்குத் தெரியும். எனவே ஐயர் அவர்கள் எழுதிய 'என் சரித்திர'த்தை ஆவலாக எதிர்நோக்கியிருந்தேன். அதில் ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களைப் பற்றி மோசமாகத் தாக்கி எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன். ஐயரவர்கள் பிறப்பதற்கு முன்பே தாமோதரம்பிள்ளை பெரும் புகழ்பெற்றுச் சென்னையிலே உத்தியோகம் பெற்றார். ஐயர் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருக்கும்போதே பிள்ளையவர்கள் புத்தகங்களை வெளியிடுவதைத் தம் கடமையாகக் கொண்டுவிட்டார். 1885 ஆம் ஆண்டுதான் கும்பகோணத்தில் சந்தித்த தாமோதரம்பிள்ளைக்குத் தான் பலரை அறிமுகம் செய்துவைத்ததாகவும், அவர் சிந்தாமணிப் பிரதியை 'அமுக்க' வந்திருப்பதாகச் சந்தேகித்ததாகவும், தமக்குக் குருவான மீனாட்சிசுந்தரம் பிள்ளை அருமையாக எழுதிய தணிகைப் புராணக் குறிப்பை உபயோகிக்கத் தெரியாத முட்டாள் என்றும் எழுதியிருக்கிறார். ஆனால் கும்பகோணத்திலே, புதுக்கோட்டை திவானாக இருந்த அ. சேஷையசாஸ்திரிகள் தாமோதரம்பிள்ளையவர்களைச் சந்தித்து அவருக்கு வேண்டியன செய்து கொடுத்தது மாத்திரமன்றி பின் இரண்டு வருடம் செல்லப் புதுக்கோட்டை உயர் நீதிமன்றத்து நீதிபதியாகவும் ஆக்கினார் என்பது சரித்திரம். அவர் பெயரிலேயே கலித்தொகை வெளிவந்திருப்பதும் இதற்குச் சாட்சி. ஐயர் அவர்கள் நூல் வெளியிடக் காகிதம் வாங்கப் பணம் இல்லாதபோது தாமோதரம் பிள்ளை உதவிய கதைகூட எமக்குத் தெரியும். என்றாலும் ஐயர் அவர்கள் யாழ்ப்பாணப் புலவர் பெருமக்களிற் குரோதம் வைத்து எழுதியிருப்பது உண்மை.

### தமிழ்ச் சுடர் மணிகள்:

ஐயர் அவர்கள் எப்படி எழுதினாலும் சரியானபடி தாமோதரம்பிள்ளை அவர்களைத் தமிழ்ச்சுடர் மணிகள் என்ற நூலிலே வையாபுரிப் பிள்ளை அவர்கள் காட்டுகிறார்கள். அந்நூலிலே ஐயரவர்களைப் பற்றியும் பிள்ளை அவர்களைப்பற்றியும் எழுதியிருப்பதை ஒவ்வொருவரும் படித்துப் பாருங்கள். அப்போது உண்மை விளங்கும். 'அவர்கள் எல்லாம் அறிந்த பெரும் புலவர் எனத் தம்மைக் கூறிக் கொள்ளவில்லை. தமக்குத் தெரியாத பொருள்களைப் பிறரிடம் கேட்டுணர்வதில் சிறிதுங் கூச்சமற்றவர்கள். அவ்வாறு கேட்பது தமக்குச் சிறுமையாமென்று கருதியவர்களுமல்லர், தமிழன்னைக்குப் புரியும் திருத்தொண்டில் பிற வித்துவான்களும் உழைத்துவர வேண்டுமென்ற கொள்கையையே உடையவர்கள். ஒரு சிலர் தம்மைத் தவிரத் தமிழ் நூல்களைப் பதிப்பிடும் பணியில் இறங்கிய பிறருக்கெல்லாம் நரகதண்டனை விதித்துச் சபித்துள்ளார்கள்! பிள்ளையவர்கள் இவ்வினத்தைச் சார்ந்தவர்களல்லர்" என்றெல்லாம் வையாபுரிப்பிள்ளையவர்கள் கூறியிருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

### ஆற்றங்கரையிலே

சமீபத்திலே அன்பர் ஒருவர் அனுப்பியிருந்த சிறிய நூலொன்றைப் பார்த்தேன். அது வானொலியிலே செய்த மூன்று பிரசங்கங்கள். அதில் தாமோதரம்பிள்ளை அவர்களைப்பற்றியது மொன்று. அதில் தாமோதரம்பிள்ளையவர்கள் சாமிநாதையர் அவர்களைச் சந்தித்தபிறகுதான் நூல்களை வெளியிடும் விருப்பம் கொண்டிருந்தார் என்று கருதத்தக்கதாக யாதொரு ஆராய்ச்சியும் இன்றி அந்த அறிஞர் முடிவு கட்டியிருக்கிறார். ஆற்றங்கரையிலே ஒரே இடிகரையாக இருக்கும். இக்கட்டுரைகளைப் படிக்கும் இக்காலப் பண்டிதர்களும், பி. ஏ., பி. ஓ. எல். களும் அதுவே சரி என்றுதான் முடிவு கட்டுவார்கள்.

### என் கடமையும் உங்கள் கடமையும்

ஆனபடியால்தான் இவ்வளவும் கூற நேர்ந்தது. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் நாடே யாழ்ப்பாணத்தவர்களுடைய தாக இருந்தது. கிறிஸ்த சமயத்தை எதிர்த்துச் சைவத்தைப் பரப்ப வந்த ஆறுமுகநாவலர் செய்த தமிழ்ப்பணியும், தமிழ்த்தாயின் மணிமகுடமாகத் தொல்காப்பியம், கலித்தொகை, வீரசோழியம் என்பவற்றை அச்சேற்றிய சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களும், திருவாவடுதுறையில் மகாவித்துவானாக இருந்து திராவிடப் பிரகாசிகை எழுதிய கோப்பாய் சபாபதி நாவலர் அவர்களும், சரியான சொல்லைத் தெரிந்தெடுத்து அமைத்துப் பேரகராதி கண்ட கதிரவேற்பிள்ளையவர்களும், 1800 வருடங்களின் முன் தமிழர் நிலை என்ற அருமையான ஆராய்ச்சி நூல் எழுதிய மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளையவர்களும், சைவசமயத்தின் நுண்பொருள்களைக் கண்டுபிடித்து எழுதிய காசிவாசிஸ்ரீசெந்திநாதையர் அவர்களும் இலக்கணத்தில் மகாமேதையாயிருந்த முருகேசபண்டிதரும் யாழ்ப்பாணம் ஈன்ற தமிழ்ச் செல்வர்களன்றோ. தமிழ், சமயம், அகராதி, பண்பாடு இவற்றை உணர்த்திய யாழ்ப்பாணத்தவர்களைப்பற்றி இந்தத் தலைமுறையில் உள்ளவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. இவர்களைப்பற்றித் தெரிந்தவர்கள் அடிக்கடி ஞாபகமூட்டவேணும் இப்படிப்பட்ட விழாக்கள் அவசியமானதாகும். தாமோதரம்பிள்ளையவர்களது பலதுறைப்பட்ட தொண்டுகள் சம்பந்தமாகப் பெரிய நூலொன்று எழுதுவது எனது அவா. அதற்குமுன் அவர் பதிப்பித்த நூல்களின் முன்னுரைகளைப் புத்தகமாக உங்கள் சபையாவது, வேறு யாராவது வெளியிடுவது மிகவும் நல்லது. தமிழ் உள்ளளவும் தாமோதரனார் புகழ் அழியமாட்டாது. அவருக்கு மாசு கற்பிக்கும் கூட்டத்தாருக்கு மறுமொழி கொடுக்க வேண்டியது யாழ்ப்பாணத்தின் கடமை.

[முதலாவது கட்டுரை 18-9-55 இதழில் வெளியாகியுள்ளது.]

# சங்கீத மும்மூர்த்திகள் நினைவு மண்டபத் திருப்பணி

"நல்லன யாவும் நாடுறு நாடு
நாரத கான நலந்திகழ் நாடு"

என்று நமது புண்ணிய பாரத பூமியைப் பாடினார் மகாகவி பாரதியார்.

கான கலம் திகழ்கின்ற இந்தப் புண்ணிய பாரத நாட்டிலே நம்முடைய தென்னாடு, மிகப் பழமையான கலாசாரம் நிரம்பியது. சமயம், தத்துவஞானம், கலைகள் ஆகிய துறைகளில் நம்முடைய இலக்ஷியமும், சாதனைகளும் அபாரமானவை. நம்முடைய கர்நாடக சங்கீதமோ ஈடு இணையற்றது என்று கொண்டாடப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் நமது நாட்டின் அற்புதமான சங்கீத பரம்பரையாகும். அதிலும் சங்கீத மும்மூர்த்திகளான ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாம சாஸ்திரிகள் ஆகிய மும்மணிகளின் சேவையை யாரும் மறக்க முடியாது. இந்த மூன்று மகான்களும் ஒரே காலத்தில் இருந்தவர்கள். அதுமட்டுமல்ல, ஒரே ஊரில், திருவாரூரில் பிறந்தவர்கள். இது ஒரு அதிசயமேயல்லவா?

திருவாரூர் தமிழ்நாட்டின் புனிதமான க்ஷேத்திரங்களில் மிகவும் முக்கியமான ஒரு ஸ்தலம். "தென்னாடுடைய சிவன்" இங்கே தியாகராஜன் என்ற திருநாமம் தரித்து எழுந்தருளியிருக்கிறான். இந்தத் திருக்கோயில் எத்தனையோ நூற்றாண்டுகளாக பக்தர்களையும், ஞான சீலர்களையும், கவிஞர்களையும், சங்கீத மகான்களையும் ஆட்கொண்டிருக்கிறது. கமலாலயம் என்னும் புனித தீர்த்தச் சிறப்போடு, சங்கீத மும்மூர்த்திகள் அவதரித்த சிறப்பும் தஞ்சை ஜில்லா திருவாரூருக்கே உரியது.

இந்த மூன்று மகான்களின் ஜன்ம தினத்தையும் அவர்கள் பிறந்த ஸ்தலமாகிய திருவாரூரிலேயே கொண்டாடவேண்டும் என்று பல பக்தர்களும் கருதுகிறார்கள். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் திருவுளக்கருத்தும் இதுவே. இதன் பயனாக இப்பொழுது திருவாரூர் மும்மூர்த்தி சபை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் நோக்கம், சங்கீத மும்மூர்த்திகளுக்குத் திருவாரூரில் பொருத்தமான நினைவு மண்டபங்கள் எழுப்பி, அவர்களது சங்கீதச் செல்வத்தைப் பாதுகாக்கவேண்டும் என்பதே.

இறைவனே நாத வடிவமாக நிற்கிறான் என்றும், நாத உபாசனையே உன்னதமான பக்தி சாதனம் என்றும் கருதி வழிபடுகிற பரம்பரையில் வந்த நாம், திருவாரூரில் இந்த மும்மூர்த்திகளின் நினைவு மண்டபத் திருப்பணிக்கு உற்சாகத்தோடு உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். இந்த நிதி திரட்டும் காரியத்துக்காகச் சென்னையில் ஒரு நிர்வாகசபை அமைக்கப்பட்டிருக்கிறது. நன்கொடை அனுப்புவோர் இந்தச் சபையின் பொக்கிஷதாரரான ஸ்ரீ சதாசிவம், கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை, என்ற விலாசத்துக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம் :

ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார் — தலைவர்
ஸ்ரீ எஸ். அனந்தராம கிருஷ்ணன்
ஸ்ரீ ஏ. எம். எம். அருணாசலம்
டாக்டர் வி. [illegible] — [illegible]
ஸ்ரீ சதாசிவம் — பொக்கிஷதாரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரச் செய்தி

தமிழ் மொழிக்கு ஆபத்து ஏற்படுமானால் தாம் யூ. என். பீ. கட்சிக்கு ''அரோகரா!'' போட்டுவிட்டு வெளியேறி விடுவதாகவும் தமிழை எவராலும் அழிக்கமுடியாதெனவும் மூதூர்ப் பிரதிநிதி ஜனப் எம். ஈ. எச். முகமதலி சமீபத்தில் திருகோணமலையில் நடைபெற்ற ஆசிரியர் விடுமுறைக் கழகத்தைத் திறந்துவைத்துப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

## 90 வயது மணமகன்!

அம்பாந்தோட்டைப் பகுதியில் வசித்துவரும் எம். ஹனிஸ் அப்பு என்பவருக்கு இப்போது வயது 90 இவர் 45 வயதுள்ள இசொச்சிஹாமி என்னும் பெண்ணை மணம்செய்துகொள்ள விவாகப்பதிவுகாரருக்கு அறிவித்தல் கொடுத்தார். மணமகன் கையொப்பமிடும்போது வேருெருவர் உதவி செய்தாராம். இவர்களின விவாகம் ஒக்டோபர்மாதம் 2ஆந்திகதிநடைபெறுமெனத் தெரிகின்றது.

## ஏக்கருக்கு 101 புசல்

தம்பலகாமம் . வடக்குக் கிராம விதானை திரு. கந்தையா என்பவர் தமக்குச்சொந்தமான நிலத்தின் ஒருபகுதியையப்பானிய முறைப்படிநாற்றுநட்டுச்செய்கைசெய்ததன்விளைவாக ஏக்கருக்குநூற்றொரு புசல்வீதம் விளைந்திரு[ப்ப]தாகத் தெரிகிறது.

## வலக்கரைத் திட்டம்

இரணைமடு வலக்கரை இரண்டாவது குடியேற்றத் திட்டத்தின்கீழ் குடியேறுவதற்கு 400க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் தீவுப்பகுதியிலிருந்து வட.மாகண அதிபருக்கு அனுப்பப்பட்டிருந்தன. 200 விண்ணப்பக்காரர் பரிசீலனை செய்யப்பட்டனர். அவர்களில் 28 பேருக்கு குடியேற்ற உத்தரவு கொடுக்கப்பட்டது.

## மாதத்துக்கு 4 டக்டர்

சேவையில் அதிருப்தியடைந்து சுகாதாரப்பகுதியிலிருந்து சராசரி மாதத்துக்கு நான்குடக்டர்கள்வேலையினின்றும்நீங்குகின்றுர்கள்.சம்பளம் போதாமை, தனிப்பட்ட வைத்தியம் செய்ய இடமில்லாமை, தகுந்த வசிப்பிட வசதிகள் இல்லாமை ஆகியனவே இவர்களின் குறைகளில்பிரதானமானவையாகும்.

## விவசாயத்துக்கு 90 கோடி

காணிகளை விருத்திசெய்து குளங்களைத் திருத்தி மத்தியவர்க்கத்தினருக்கும் ஏழை விவசாயிகளுக்கும் உதவி புரியும் நோக்கமாக அரசாங்கம் 90 கோடி ரூபாய் செலவுசெய்யும்.

## சிகிச்சைபெற 3000 பேர்.

கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் சத்திர வைத்தியம் பெறுவதற்கு 3,000 பேர் காத்திருக்கின்றனர். போதிய ளவு படுக்கை வசதிகளும் அதிக தொகையினரான நிபுணர்களும் கிடைக்குமவரை இந்நிலை நீடிக்குமெனத் தெரிகின்றது.

## காட்டு யானையின் காதல்!

தம்பதேனியாப் பகுதியில் யானைப்பாகன் ஒரு யானையைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கையிற் காட்டு யானைகள் வரவே பாகன் மரத்தில் ஏறிக்கொண்டான். காட்டிலிருந்துவந்த ஒற்றைக் கொம்பன் யானை குளித்துக்கொண்டு நின்ற பெண் யானையை அழைத்துக்கொண்டு காட்டுக்குள் ஓடிவிட்டது.

## நேருஜி நம்பிக்கை

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினரின நிலைமை மிகவும் அதிருப்திகரமாக இருக்கிறதென்று சமீபத்தில் இந்திய முதலமைச்சர் நேருஜி மக்கள்சபையிற் தெரிவித்தார். எனினும் இரு நாடுகட்கிடையேயும் நட்புறவு ஏற்படடே தீருமென நேருஜி நம்பிக்கை தெரிவித்தார்.

## சைக்கிள் வீரன்

ஹைதராபாத்தில் திரு.ஜோசெப்தொலாத்என்னுமஇந்திய சைக்கிள் வீரர் ஒரேமூச்சில் 132 மணிநேரம் சைக்கிள் ஓட்டி முடித்துள்ளார். இதுவரை 126 மணி நேரம் இறங்காமற்சைக்கிள்ஓட்டியுள்ளனர்

---

கிராமியக் கவிதை : : அ. ஸ. அப்துஸ் ஸமது

# வேய்ங்குழலும் பைங்கிளியும் தலைவனைக் காணுத தலைவி தவிப்பு

இரண்டு சம்பவங்கள்: அவை நம் மனக்கண்முன் காட்சியளிக்கின்றன. ஒன்று, அன்று நிகழ்ந்தது. அது சங்க காலக் கவிதருங்காட்சி. மற்றையது இன்று நிகழ்ந்தது. ஒரு கிராமியக் கவிக்குயில் தருங்காட்சி. இரண்டும் ஒன்றுக்கொன்று சமம் என்பதல்ல. அவற்றின் கவிநயமும் உணர்ச்சியின் ஒன்றுபட்ட பாவமும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

ஏழு நிறக குதிரைகளைப் பூட்டிய தேரையுடைய சூரிய பகவான், குடபாலிடை, மலைக்குமப்பால் மறைந்துவிட்டான். வானம் செக்கச் செவேலெனச் சிவந்திருந்தது. இருளும் மெதுவாக உலகைக் கவ்வலாயிற்று. இந்த நேரத்திலே அவள் தலைவன் வரவுக்காகக் காத்திருக்கிருள். அவன் பொருள் தேடக் காலையிற் பிரிந்தவன் மாலையாகியும் வந்தபாடில்லை. அவனையே நினைந்து வெந்துகொண்டிருக்கிருள் அவள்.

இந்த ஆயர் குலத்தவருக்குக் கொஞ்சம்கூடப் புத்தி கிடையாது போலும். தம்மிடமுள்ள இனிமைசொட்ட ஊதுகின்ற குழலை, எந்த நேரத்தில் ஊதவேண்டும், எந்த நேரத்தில் ஊதக்கூடாது என்பது பற்றிச் சிறிதுகூடச் சிந்திப்பதில்லை. மாலையாகிவிட்டது. பசுக்களை வீடுகளுக்குக் கொண்டுசெல்கின்றனர். அப்பொழுது தாம் உவந்து ஊதுகின்ற அந்தச் சிறிய குழலை அழகாக ஊதிக்கொண்டு செல்கின்றனர். இனிமை சொட்டும் அவ்வோசை எங்கும் பரவுகிறது. அது அந்தத் தலைவியின் காதிலும் விழுகிறது. அவள் மனம் எங்கோ அலைகிறது. அதனை அவளால் எப்படி இரசிக்க முடியும்? இவ்வினிய ஓசை,வேல் கொண்டு அவளைத் தாக்குவதுபோலிருக்கிறது. அன்று சங்க காலத்தில்நிகழ்ந்தஇக்காட்சியினை அழகுறச் சித்திரிப்பவர், மறையன்பொறையனுர் என்ற அருங்கவி.

> தேரோன் மலைமறைந்த
> செக்கர்கொள் புன்மாலை
> ஆராயின் ஆயன்
> உவந்தூதும்—சீர்சால்
> வேய்குழலோசைசெறிதொடி
> வேல் கொண்டு
> எறிவது போலு மெனக்கு.

* * *

அடுத்துக் கிராமக் கவிக்குயிலாள் தரும் காட்சியொன்றை நோக்குவாம். அவள் குழந்தைப் பேறில்லாதவள். பிள்ளைப்பாசத்தினுற் பேசி மகிழ ஒரு கிளியை வளர்த்து வந்தாள். அது அழகாகப் பேசும் போது அதைக் கேட்டு அவள் மகிழ்வாள்.

முன்னைய காட்சிபோலத்தான் இங்கும், தலைவன் பொருள் தேடப் பிரிந்தவன். பலநாட்களாகிவிட்டன. இன்னும் வரவில்லை. இதை நினைத்து நினைத்து உள்ளம் வெம்பிக் கொண்டிருந்தாள். அன்று சிந்தனை அவளைப் பலமாகப் பிடித்துக்கொண்டது. சிந்தனையின் எல்லைக்கே சென்றுவிட்டாள்.

இவள் நிலையை அறியுமா கிளி? அது வழமைபோலத் தன் எஜமானியிடம் பேசியது. தன் விருப்பம்போல எதை எதையோ பேசியது. இவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. அதன் இனிமையான குரலும் ஈயத்தைக் காய்ச்சித் தன் இரு காதுகளிலும் ஊற்றுவது போலிருந்தது.எனவேதான், ''கிளியே! நீ வேறு எதையெல்லாமோ பேசி உன் இனிமையான நாதத்தையும் போக்குகிருய். அது என் இரு காதுகளிலும் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போலிருக்கிறது. இதை விட்டு என் நாயகனுர் எப்போது வருவார் என்று கூறு'' எனக் கேட்கிருள். இவள் கவியுள்ளம் கிளியிடம்கூடத் தன் குறையைக் கூறுகிறது.

> ஈயத்தைக் காய்ச்சி
> இருகாதிலு மூற்றி
> நாதத்தைப் போக்கும்கிளி
> நம் நாயகனுர்
> வாறதெப்போ?

இரு கவிதைகளும் ஒன்றையொன்று தழுவி நிற்கின்றன. கவித்துவ ஆற்றல்களில் வேறுபாடிருப்பினும், உணர்ச்சிகள் ஒன்றுபட்டிருப்பது கண்கூடு. உணர்ச்சிகள் தாம் சிறந்த கவிதைகளை உருவாக்கும் சக்தி.

கவிஞன் ஒருவனுக்கு ஏற்பட்ட அதே உணர்ச்சி அதே சம்பவம் காரணமாக எழுத்தறிவற்ற ஒரு கிராமியப் பெண்ணுக்கு ஏற்பட்டதென்றுல் அதில் வியப்பென்ன இருக்கிறது? கவித்துவமும் உணர்ச்சியும் கல்வித் தராதரத்தைப் பொறுத்தவையன்று. அது மனித சமுதாயத்தின் பொதுவுடைமைச் சொத்து. அது வாழ்க!

---


# யப்பான் சென்ற இராசமாணிக்கம் கருத்து

கொழும்பு

தென்கிழக்காசிய நாடுகளில அவ்வப்போது நடைபெறும் மகாநாடுகளில் இலங்கை பங்குபற்றுவதன் மூலம் அந்த நாடுகளின் தொடர்பை வலுப்படுத்துவதற்கு நல் வாய்ப்புக் கிடைக்கிறதெனச் சென்ற 13-9-55 செவ்வாய்க்கிழமை மாலை டோக்கியோவிலிருந்து இலங்கை திரும்பிய பட்டிருப்புப் பிரதிநிதி எஸ். எம். இராசமாணிக்கம் அவர்கள் ஈழகேசரி நிருபரிடம் [..] தெரிவித்தார்.

டோக்கியோவில் நடந்தேறிய தென்கிழக்காசிய சிரமைப்பு மகாநாட்டுக்கு இலங்கையின் பிரதிநிதிகளில் ஒருவராகச் சென்று திரும்பிய திரு. இராசமாணிக்கம் மேலும் கூறியதாவது: ''கமத்தொழில் கூட்டுறவு ஆகியவற்றில் இலங்கை முன்னேறுவதற்கு இப்படியான மகாநாடுகள் பேருதவி செய்யக்கூடியனவாகும். நாங்கள் யப்பானிலிருந்த காலத்தில் அந்நாட்டின் [..] முன்னேற்றை நேரிலே காணக் கூடியதாயிருந்தது. அங்குள்ள தொழில் நிலையங்கள், கமத்தொழில் நிலையங்கள், கல்வி நிலையங்கள், பண்ணைகள் ஆகியவற்றுக்குச் சமுகமளித்தோம. அந்நாட்டு மக்களின் அன்பு கனிந்த உபசரிப்பு என்னுள்ளத்தைமிகவும்கவர்ந்தது.''

இந்த மகாநாட்டுக்கு இலங்கையின் மற்றோர் பிரதிநிதியாகச் சென்றிருந்த ஜனப். எம். ஆர். மிர்சாவும் திரு. இராசமாணிக்கத்துடன் இலங்கைவந்து சேர்ந்தார்.



குணம், மணம், ருசி நிறைந்தது!
K.P.லிங்கம் நல்லெண்ணெய்
உபயோகிக்க சிறந்தது...
தயாரிப்பாளர்: K.பாமலிங்கம்.,
No, 26, செட்டித்தெரு, யாழ்ப்பாணம்


[201-ii]

---



# ஊர் வதந்தி

கொண்டோடி

- ● நெருப்பில்லாமல் புகை வராதென்பது ஊகத்துக்கு உகந்த உபதேசமாம்.
- ○ ஒத்துழைப்புப் பிரதிநிதிகள் முதலமைச்சரால் மிரட்டப்பட்டதுபற்றிய வதந்திப் புகையையிட்டு ஊகங்கள் பல கிளம்புகின்றனவாம்.
- ○ புகைக்குக் காரணமாகநெருப்பைக் கக்கத் தூண்டியவர் அமைச்சரவையில் மகுடி ஊதும் ஒரு பேர்வழியாம்.
- ○ அந்தப் புகையையும் நெருப்பையும் மூடிமறைத்தமைக்குத் தந்திரங்கள் பல கையாளப்பட்டனவாம்.
- ● மறைந்துகிடக்கும் செய்திகளைச் சரித்திரங்கள்மூலம் அம்பலப்படுத்தலாமாம்.
- ○ இலங்கைத் தமிழரின் சரித்திரச் சான்றுகளைத் திரட்டித் தமிழரசுக்கட்சி மலர் வெளியிடப்போகிறதாம்.
- ○ திரட்டிச் சேர்க்கும் பொறுப்புத் தமிழ் வித்துவான் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதாம்.
- ● சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் தன் வரலாற்றைத் திரட்ட முன்வந்திருக்கிறதாம்.
- ○ அச் சபையின் முன்னுள் தலைவரின் வாழ்க்கைச் சிறப்பு நூல் ஏற்கனவே வெளிவந்துவிட்டதாம்.
- ○ வெளியிடக் கைச்சாத்திட்டு உதவியவர்கள் வெவ்வேறு ஊர்களில் வசிப்பவர்களாம்
- ● கையெழுத்து வரிசையிற் கள்ளக் கைச்சாத்து ஆபத்துமிக்கதாம்.
- ○ அரசாங்கப் பணத்தைச் சுருட்டுவதற்கான பொய்ப் பட்டியல் தயாரிக்க அடிக்கடி அது பயன்படுமாம்.
- ○ வவனியாப்பகுதியிலும் சமீபத்திற் சந்தேகத்துக்கிடமான பட்டியல் ஒன்று உருவாக்கப்பட்டதாம்.
- ○ உருவாக்கும் வேலையில் ஈடுபட்டவர்கள் உணவுற்பத்திக்கழகப் பிரதிநிதிகளுடன் சென்றவர்களாம்
- ○ இளைஞர் விவசாயக்கழகங்களைக் கட்டிக் காக்கும் அந்த ஊழியர்கள் இடத்துக்கேற்றபடி நடிக்கத் தெரிந்தவர்களாம்.
- ● நாடகமேடை நடிகர்களுக்கு இப்போது நாட்டிற் பஞ்சமேயில்லையாம்.
- ○ வசனத்தை உரக்கப்பேசி மேடையை வலம்வந்துபோனுற்கூட அதில் நடிப்புக் கலை நிரம்பித் ததும்புமாம்.
- ○ கலையை வளர்க்கக் கடந்தகாலப் பேச்சுநடையும் இப்போது கைகொடுத்துதவுகிறதாம்.
- ● அடுத்த பொதுத் தேர்தலிற் போட்டியிடக் கச்சைகட்டும் சிலர் தம்மை அறிமுகப்படுத்தப் பத்திரிகைகள் கைகொடுத்துதவ வேண்டுமென ஆசைப்படுவார்களாம்.
- ○ இதன் விளைவாகக் குசுகுசு கூட்டங்களிலெல்லாம் அவர்கள் தம் சுயவிளம்பர புராணங்களைக் கொட்டி யளப்பார்களாம்.
- ○ விளம்பரத்தில் விருப்பமுள்ள ஓர் எதிர்கால அபேட்சகர் பத்திரிகை நிருபர்களிடம் பல்லைக் காட்டுவது பரிதாபக் காட்சியாம்.
- ○ பரிதாபத்துக்கிடமான அந்தப் பிரகிருதி பண பலத்துக்குப்பதில் பத்திரிகைப் பலத்தை நம்பியிருக்கிருராம்.
- ● அதிகார பலத்தோடு விளங்கும் யாழ்ப்பாணப்பகுதித் தபால் நிலைய அதிகாரியொருவர் இடம் தெரியாமல் தவித்த ஆங்கிலேயர் சிலரிடம் ஏறுமாருக நடந்தாராம்.
- ○ ஊருக்குப் புதியவர்களுக்கெல்லாம் வழிகாட்டுவது என் கடமையல்ல என்று அவர் உறைப்பாகச் சொன்னுராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராதனையிலுள்ள பல்கலைக் கழகம் சிங்களபலைக்ல்க கழகமாக மாற்றப்பட்டால், விசாரணைச் சபையினர் கூறியிருப்பதுபோல், வடபகுதியில் நிறுவப்படும் பல்கலைக்கழகம் தமிழ்ப் பல்கலைக் கழகமாகத்தான் இருக்கமுடியும்.

# தமிழினம் இணைந்துவாழவும்
## கலைவளம் பல்கிப் பெருகவும்
## இன்னுமொரு பல்கலைக்கழகம் நிறுவவேண்டும்

இன்றைய அரசியற் சூழ்நிலையில் ஆட்சிக்கு மாத்திரமல்லாது கல்விக்குரிய மொழியாகவும் சிங்களத்தைத் திணிப்பதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன.

போராதனையிலுள்ள பல்கலைக்களகத்திற் சிங்களம் மட்டுமே போதனா மொழியாக இருக்கவேண்டுமென உயர்தரக் கல்வி விசாரணைச் சபையினர் தெரிவித்துள்ளனர். உயர்தரக் கல்வி தமிழிற் போதிக்கப்படவேண்டுமானால் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டுமென இச்சபையினர் விடுத்த அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளனர். இது வரவேற்கவேண்டியதொன்று.

போராதனையிலுள்ள பல்கலைக்கழகத்திற் பயிலும் மாணவர்களில், நாற்பது வீதத்திற்கு மேலானோர் தமிழ் மாணவர்களேயாவார்கள். இங்கு சிங்களம் மாத்திரமே போதனாமொழியாக்கப்பட்டால் தமிழ் மாணவர்களின் கதியென்ன? அவர்களும் சிங்களத்தைக் கட்டாயமாகக் கற்கவேண்டுமா? அல்லது அவர்கள் தமிழ்மூலம் உயர்தரக் கல்வி பயிலுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுமா? அதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்படாவிட்டால், நட்டாற்றில்விடப்பட்டவர்களைப்போலத் தமிழ் மாணவர்கள் தவிக்கவேண்டுமல்லவா?

இன்று சம்பவங்கள் போகின்ற போக்கைப் பார்த்தால் போராதனையிலுள்ள பல்கலைக்கழகம் சிங்கள மயமாக்கப்படும் போலிருக்கின்றது. போராதனையிலுள்ள பல்கலைக் கழகம் சிங்கள மயமாக்கப்பட்டால், வேறொரு தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கவேண்டியது அவசியமல்லவா? இதுமாத்திரமல்லாது வேறு காரணங்களுக்காகவும் மற்றுமொரு பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டியதாகத்தானிருக்கிறது.

ஈழநாட்டின் சனத்தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. சனத்தொகை அதிகரித்தபடியினாலும் கல்வி பயிலும் மாணவர்களுடைய தொகை அதிகரித்தபடியினாலும் ஒரு பல்கலைக் கழகம் போதாது. ஆகவே வேறுமொரு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டாற்றான் எல்லா மாணவர்களுக்கும் சம சந்தர்ப்பமளிக்க முடியும்.

இலங்கையில் இப்போதுள்ள பல்கலைக் கழகத்தில்

**ம. சத்தியமூர்த்தி, பி. ஏ.**

இடவசதியின்மையால் தகுதியும் திறமையுமுள்ள மாணவர்கள்கூட உயர்தரக் கல்வி பயில முடியாத நிலைமையிலிருக்கின்றார்கள். இலங்கைப் பல்கலைக்கழகத்திற் படியாத மாணவர்களும் பல்கலைக் கழகத்தில் நடத்தப்படும் பரீட்சைகளை எழுத அனுமதிக்கப்பட்டால் பலர் இப் பரீட்சைகளிற் சித்தியடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

தங்களுடைய சொந்த நாட்டிலே பல்கலைக்கழகத்திற் சேர்ந்து படிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடையாத எத்தனையோ மாணவர்கள் இந்தியாவுக்கும் மற்றைய நாடுகளுக்கும் செல்லுகின்றார்கள். சென்னை, சிதம்பரம், கல்கத்தா, பம்பாய், பங்களூர், பூனா போன்ற இடங்களில் ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். இவர்களிற் பெரும்பான்மையோர் தமிழ் மாணவர்களென்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியாது. இலங்கை மாணவர்கள் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதை இலங்கை அரசாங்கம் விரும்பவில்லையெனத் தெரியவருகின்றது. இந்தியாவிற் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பெருந்தொகையான பணம் இலங்கையிலிருந்து அனுப்பப்படுவதாகச் சில வட்டாரங்கள் புகார்செய்யவும் கிளம்பியுள்ளன.

போராதனையிலுள்ள பல்கலைக்கழகம் சிங்களப் பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டால் விசாரணைச் சபையினர் கூறியிருப்பதுபோல் வடபகுதியில் நிறுவப்படும் பல்கலைக்கழகம் தமிழ்ப் பல்கலைக் கழகமாகத்தான் இருக்கமுடியும். பாரத நாட்டிலுள்ள தமிழகத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எப்படிச் சிறந்து விளங்குகின்றதோ அதைப் போல ஈழதமிழகத்தில் நிறுவப்படவிருக்கும் பல்கலைக் கழகம் விளங்க வேண்டும்— இதுவே தமிழ் பேசும் மக்களின் அவாவாக இருக்கும்.

பல கலைகளும் பல்கிப் பெருகுவதற்கு வடபகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் பல்கலைக்கழகங்கள் நிறுவப்படவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் இளைஞர்கள் இன்பத் தமிழுடன் இணைபிரியாது வாழ்வார்கள், கன்னித் தமிழைக் காதலிப்பார்கள்; செந்தமிழைச் சீரும் சிறப்புடனும் திகழச் செய்வார்கள். அரசாங்கத்தினுடைய ஆதரவையும் பொதுமக்களுடைய அனுதாபத்தையும் பெற்றால் இக் கைங்கரியம் நிறைவேறுமென்பதிற் சந்தேகமில்லை.

---

# 3 பல்கலைக் கழகங்கள்
## மாணவர்க்குச் சம சந்தர்ப்பம்
### வழக்கறிஞர் கார்த்திகேசு யோசனை

கிராமாபிவிருத்திச் சங்கங்களின் தலைவரும், பிரபல வழக்கறிஞருமான திரு. வீ. எஸ். கார்த்திகேசு ஜே. பி. அவர்கள் சமீபத்திற் கொடிகாமத்தில் நடைபெற்ற சங்க ஊழியர்கள் கூட்டத்திற் பேசியதன் சாரம் வருமாறு:

இருமொழிமூலம் போதனைப் பல்கலைக்கழகத்திற் கல்வி கற்பிப்பின் மாணவர்கள் தொகையும் இருமடங்காகுமெனக் கருதலாகாது. இன்றைய நிர்வாகமும் இடவசதிகளும் போதுமானவை. பேராசிரியர்கள் தொகைதான் இரட்டிக்கப்படவேண்டும். பேராதனைக் கட்டிடத் திட்டம் பல வருடங்களின்முன் ஆரம்பிக்கப்பட்டும் இன்னும் முடிந்தபாடில்லை. அப்படியிருக்கையில் 1959ஆம் ஆண்டுக்குமுன் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகத்திற்கான கட்டடங்கள் கட்டிவிடலாமென உயர்தரக்கல்வி விசாரணைச்சபை கருதுகின்றது.

போதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தின்மூலம் கல்வி கற்பிக்கப்பட்டுத் தமிழும் சிங்களமும் உபபாடங்களாக இருந்துவரின் அது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதுதான். காலியிலும் ஒரு கழகம் அமைக்கப்படவேண்டும். அங்கு சிங்களத்தின்மூலம் பாடங்கள் போதிக்கப்படவேண்டும். தமிழும் ஆங்கிலமும் உப பாடங்களாக விளங்கவேண்டும். அதேபோலவே யாழ்ப்பாணத்தில் ஒரு கழகம் அமைக்கப்படவேண்டும். அங்கு தமிழிற் போதனை நடைபெறவேண்டும். சிங்களமும் ஆங்கிலமும் உப பாடங்களாக இருக்கவேண்டும்.

மாணவர்களுக்குத் தாய்மொழி மூலமே பாடங்களைப் படிப்பிக்க வேண்டும். மூன்றும் வகுப்பில் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்படவேண்டும். 7ஆம் வகுப்பில் இரண்டாவது தேசியமொழி கட்டாயபாடமாக்கப்படவேண்டும். இத்திட்டம் எல்லாமாணவர்களுக்கும் சாதிவித்தியாசமின்றிச் சமசந்தர்ப்பமளிப்பதாகும்.

பிரிட்டாஷாரின் கீழ் ஆங்கிலம் அரசகரும மொழியாக இருந்தபோது அதனைக் கற்றுவந்த தமிழர், சிங்களம் அரசமொழியாகுமாயின் ஏன் அதனைக் கற்கக்கூடாது?' எனக் கொழும்பு மாநகரசபை அங்கத்தவரான ஜனாப் அபூபக்கர் ஒரு கூட்டத்திற் கேட்டாராம். ஆங்கிலேயரால் அப்பொழுது ஆளப்பட்ட படியினாற்றான் நாங்கள் ஆங்கிலத்தைக் கற்றோம் என்பதை அந்த அபூபக்கரவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இப்பொழுது நாங்கள் சிங்களரினால் ஆளப்படுகிறோமென்றும் தமிழ்ப்பேசும் மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிட்டவில்லையென்றும் தமிழர்கள் சிங்களரின் கடாட்சத்தில் வாழுகின்றார்களென்றும் அவர் கருதுகின்றாரா? வடமாகாணத்திலும் கீழ்மாகாணத்திலும் மாத்திரமல்ல, இலங்கையிலுள்ள எல்லா மாகாணங்களிலும் வசிக்கும் தமிழ் மக்களின் ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் சிங்களர் விரும்பின், இரண்டு மொழிகளுக்கும் சம அந்தஸ்தை எவ்வளவு சீக்கிரம் தருகிறார்களோ அவ்வளவுக்கு அது [illegible] நன்மையளிக்கும்.

## பனை விழா

பனையைப் போற்றி வளர்த்து பயன்படுத்துவது சர்வோதயம். ஆகவே, 2-10-55இல் அகில இலங்கையிலும் பனை விதைகளை நாட்டி, பனம்பொருள்களை உபயோகித்து, கிராமங்கள்தோறும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடாத்திப் பனை மகோற்சவத்தைக் கொண்டாடுமாறு காந்திய சேவாசங்கத்தினர் வேண்டுகின்றனர்.

## தேசியக் கலெண்டர்

பஞ்சாங்க சீர்திருத்தச் சபையோர் செய்த ஆராய்ச்சியின் பயனாக 51பஞ்சாங்கங்கள் ஒரே கணிதமுறையையுடையனவாகவும், 30 பஞ்சாங்கங்கள் வித்தியாசமான கணிதமுறையையுடையனவாகவும் தீர்மானிக்கப்பட்டது. இந்தியா முழுவதும் ஒரேமாதிரியான பஞ்சாங்கமே நிலவவேண்டுமெனக் கருதி அச்சபையினர் பஞ்சாங்கங்களுக்குப்பதிலாக ஒரு தேசியக் கலெண்டரைவெளியிடத் தீர்மானித்துள்ளனர். சீர்திருத்தச்சபையின் சிபார்சுகள் அங்கீகரிக்கப்பட்டால் 31-3-56 முதல் இந்தியா முழுவதும் ஒரேமாதிரியான புதிய தேசியக் கலெண்டர் நடைமுறைக்கு வரும்.

வசந்த விஷுவத்தைத் தொடர்ந்துவரும் மார்ச் 22ஆந் தேதியை புதுவருஷப்பிறப்பாகக் கொள்ளவும் அச்சபையினர் சிபார்சு செய்திருக்கின்றனர். இதையே திருக்கணித பஞ்சாங்க கணிதர் தமது பஞ்சாங்கங்களில் 'ஸாயன வருடப்பிறப்பு'' எனக் குறித்து வருகிறார்.

## பண்ணாகத்தில் சர்வோதய மகாநாடு

இலங்கையில் இரண்டாவது சர்வோதய மகாநாடு செப்டெம்பர் 30, ஒக்டோபர் 1, 2, திகதிகளில் யாழ்ப்பாணம் — வலிகாமம் மேற்கைச் சேர்ந்த பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். முன்னர் தெரிவித்ததுபோல் நீர்வேலி சர்வோதய ஆச்சிரமத்தில் நடைபெறுமென 17. 9. 55இல் கூடிய அகில இலங்கைக் காந்திய சேவா சங்க நிர்வாகசபை தீர்மானித்துள்ளது. தகுந்த காரணங்களை முன்னிட்டு இந்த இடமாற்றம் செய்யப் பட்டுள்ளது. தென்னிந்தியாவிலிருந்து வரும் தலைவர்கள் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்தடைவார்கள். ந.வி.

# ஐக்கிய முன்னணி
## சுயநலவாதிகளின் நடுக்கம்
### இ. அம்பிகைபாகன்

குருடர்களாய்ச் செவிடர்களாய் வாழும் ஒருசில அரசியல் வாதிகள், ஊமையர்களாகவும் பிறந்திருந்தால், அது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருந்திருக்கலாம். ஆனால், கண்டும் காணாதவர்களாய், கேட்டும் கேளாதவர்களாய்ப் பிதற்றித்திரியும் சில சுயநல வாதிகள் இன்று ஈழநாட்டில் வாழ்வது அவர்களுக்கு மட்டுமல்லஇலங்கை மக்களுக்குமே இழிவாகும். எனினும், தமிழர் இன்னும் பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு வாழவில்லை. ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் அவர்கள் வாளவில்லை எங்கோ ஒரு சிலர் பதவி வேட்டையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏது செய்தும், எதைப்பேசியும் ஒருபதவி பெற்றுவிடத் துடிதுடிக்கும் இவர்கள், பேசுவது என்னவென்றுதெரியாமற்பேசவில்லை எதிர் நோக்கிவரும் பேராபத்தைக் காணாமற் பேசவில்லை. தமிழுக்கு ஆபத்தில்லை: தமிழ் மக்களுக்கு ஆபத்தில்லை என்றமனப்பூர்வமான நம்பிக்கையுடனும் பேசவில்லை. எவரின் அடிகளை வணங்கி நின்றால் தமது ஆசை தீர்க்கப் படுமோ, எவரின் அடிகளை வருடினால் தமது அவா தீர்க்கப்படுமோ, அவர்களது உள்ளத்தில் ஓர் அசைக்க முடியாத தானத்தைக் கைப்பற்றிக்கொள்ளவே பேசுகிறார்கள். தமிழ் மக்களின் — தமிழ் மொழியின் — பாதுகாவலர் என்று, தமிழர் ஐக்கியமுன்னணியைக் கண்டு கலங்கிக் கண்ணீர் வடிக்கின்றார்கள்! தமிழ் மொழிக்கு ஆபத்து வந்தால், பதவியை உதறித்தள்ளத் திட்டம்போட்டிருக்கும் உத்தம புருடர்களையும், தமிழ் மொழிக்கு ஆபத்து வரவே வராது என்று வரட்டு வேதாந்தம் பேசுபவர்களையும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் 29ஆவது பிரிவில் பிடித்துத் தொங்கி நின்று ஓலமிடும் அதிவீர சிங்கங்களையும், சிங்களர்கள் மிஞ்சும் வேளையில், கப்பலேயின்றி நவரத்தினசாமியைப் போல அக்கரை போய்ச் சேர்வோம் என்று கர்ஜனை செய்யும் கலைஞர்களையும், அதி கௌரவ சேர் ஜோன் கொத்தலாவல யாழ்ப்பாணம் எழுந்தருளிய போது ஆங்கிலத்தில் திருவாய் மலர்ந்தருளியதை எல்லாம் விளங்கிக் கொண்ட ஒரே ஒரு தனிச்சிற்றம்பலனாரையும் இன்றைய தமிழர் முன்னணி ஒரு கலக்கு கலக்குகின்றதுதான். அவர்களது பாச்சா இனிமேலும் பலிக்காது என்பதுமட்டும் வெள்ளிடைமலை!

தமிழுக்கும் சிங்களத்திற்கும் அரசினர் சம உரிமையளிப்பரென்பது வீண் நம்பிக்கை! தமிழ் மக்களின் கோரிக்கை — உரிமைக்குரல் — பலமானதாக இருக்குமாயின்மொழிவாரி மாகாணங்களாக ஈழத்தைப் பிரிப்பதுதான் அவர்களது நோக்கம். அதிலும், மலைநாட்டுத்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி
சுன்னுகம் மன்மத புரட்டாதி ௯
— காசி ஆண்டு 86 —
[illegible] இல. 805

## உலகின் மகிழ்ச்சி

சமாதான காலத்திலுஞ் சரி, யுத்த காலத்திலுஞ் சரி, ஜேர்மனியானது பொதுவாக உலகிற்கும் சிறப்பாக ஐரோப்பாவுக்கும் பெரிய தலையிடியையே கொடுத்துக்கொண்டு வருகின்றது. இரண்டாவது யுத்தத்துக்குப் பின்னர் ஜேர்மனி வல்லரசினரின் நச்சு மனப்பான்மையால் பிளவுண்டது. கிழக்கு ஜேர்மனி கொம்யூனிஸ்ட் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு வளமுற்று வருவதால் அங்கு இனிமேல் தனிச்சொத் துரிமைக்கு இடமேற்படப் போவதில்லை. மேற்கு ஜேர்மனியில் அமெரிக்காவின் ஆதிக்கம் தலைதூக்கி நிற்கின்றது. இந்நிலையில் இரு நாடுகளினிடையேயும் சமாதானம் ஏற்படுத்துவது இலேசான காரியமாகத் தோன்றாதிருந்தபோதிலும், சமீபத்தில் மேற்கு ஜேர்மனியின் முதலமைச்சர் அடினுர் மொஸ்கோவுக்குச் சென்று திரும்பிய பின்னர் சமாதானத்துக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. நான்கு வல்லரசு நாடுகளினதும வெளிநாட்டு அமைச்சர்கள் ஒன்றுகூடிப் பேசிய பின்னர் அவர்களுக்கிடையே நிலவி வந்த சந்தேகங்கள் ஓரளவுக்கு நீங்கி வருகின்றன. ஆகவே, இப் புதிய சூழ்நிலையில், ருஷிய முதலமைச்சர் புல்கான் அவர்களுக்கும், அடினுர் அவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள், சமாதானத்தில் இரு தலைவர்களுக்குமுள்ள ஆர்வத்தை உலகுக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன. மேற்கு ஜேர்மனிக்கும் ருஷியாவுக்குமிடையே நல்லுறவு ஏற்படுவதாயின், இன்று இரண்டு நாடுகளாகப் பிளவுண்டு கிடக்கும் ஜேர்மனி ஒன்றுபடுவது மிக இலகுவாகிவிடும். இந்த ஒற்றுமை கைகூடுமிடத்து ஐக்கிய ஜேர்மனிக்குப் பிறநாடுகளினுலும, ஐக்கிய ஜேர்மனியினுற் பிறநாடுகளுக்கும் ஆபத்து உண்டாகாவண்ணம் ஒரு பாதுகாப்புத் திட்டத்தை அமைப்பது இலேசாகும். அத்துடன் ஐரோப்பாவில் நிலவி வரும் பெரிய தலையிடிக்கு வகை காணுவதுமாகும். நான்கு வெளிநாட்டு முதலமைச்சர்களின் முடிவையொட்டியே இச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டுமென ஜேர்மனியின் முதலமைச்சர் வற்புறுத்தி நின்றுலும் ருஷியாவின் உதவியுடன் இது நன்கு நிறைவேறுமென நம்ப இடமுண்டு. ருஷியத் தலைவர்கள் சமாதானத்தில் அக்கறை கொண்டுள்ளனர் என்பதை அடினுர் அவர்களே இன்று உணரத்தொடங்கியுள்ளார்கள். பாரதத்தின் முதலமைச்சர் நேருஜி ருஷியாவுக்குச் சென்று திரும்பியதும் அந்நாட்டுக்குச் சமாதானத்தில் நம்பிக்கை இருக்கின்றதென்பதை உலகறியச் செய்தார்கள். இந்த நம்பிக்கை வல்லரசுகளுக்கும் நாளடைவில் ஏற்பட்டு வருமென்பதை உணர்ந்து உலகம் மகிழ்கின்றது.

### கோப்பாய்த் தொகுதியிற் சேர் கந்தையாவுக்கு ஒரு கண்

— நமது நிருபர் —

கொழும்பு, 23-9-55

அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன் பல நாள் ஆலோசனையின் பின் அடுத்த பொதுத்தேர்தலில்கோப்பாய்த் தொகுதிக்கு ஓர் அபேட்சகராக முன்வருவதென முடிவு செய்துவிட்டாராம். சென்ற வாரம் அவர் யாழ்ப்பாணம் சென்று திரும்புகையில் இந்த முடிவுடன் திரும்பினுரெனவும் தேர்தற் பிரசார இயந்திரம் மெதுவாக இயங்கத் தொடங்கியிருக்கிறதெனவும் அறியப்படுகின்றது. இத் தொகுதியிற் போட்டியிட விருந்த வழக்கறிஞர் சி. அருளம்பலம் ஜே.பி. அவர்களுக்கும் சேர் சந்தையா வைத்தியநாதன் அவர்களுக்குமிடையில் உண்டான உடன்பாடு காரணமாகவே இம்முடிவு செய்யப்பட்டிருப் பதாகவும் இதன் காரணமாகத் திரு. அருளம்பலமவர்கள் அபேட்சகராக முன்வரமாட்டாரெனவும்தெரிகிறது.

சேர் வைத்தியநாதன் அவர்கள் ஒரு சுயேட்சை அபேட்சகராகப் போட்டியிடுவாரா அல்லது யூ. என். பியிற் சேர்ந்து அதன் சார்பிற் கலந்துகொள்வாரா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. அவர் யூ. என். பி. அபேட்சகராகவே முன்வரக்கூடுமென்ற அபிப்பிராயந்தான் முக்கியமாக அடிபடுகிறது. "ஐக்கிய தேசியக் கட்சியிற் சேர்ந்தால் மக்களுக்கு அதிக நன்மை செய்யலாமென்று காணும்பட்சத்தில் அதிற் சேர்ந்துகொள்வேன்" என்று அவர் சென்றவாரம் கோப்பாயில் ஒரு கூட்டத்திற் கூறியதை இந்த அபிப்பிராயத்துக்கு ஆதரவாகக்கொள்ளலாம்.

### ஆசிரியர் கூட்டம்

புதியசம்பளத் திட்டத்தினுல் மனம் புண் பட்டவர்களாகக் காணப்படும் தமிழாசிரியர்கள் தம் கோரிக்கையை முன்வைத்து இதுவரை போராடுவதில் மேலும்மேலும்ஊக்கம்காட்டி வருகின்றனர். இம்மாதம்24ஆம்திகதி சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயக் கலா மண்டபத்தில் நடக்கவிருக்கும் அ. இ. தமிழாசிரியர் சம்பொதுக்கூட்டம் இப் போராட்டத்தின் ஒரு புதிய சட்டத்தைச் சிருட்டிக்கக் கூடுமெனக் கருதப்படுகின்றது. அமைச்சர்கள் சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. வி. குமாரசாமி, சி. வன்னியசிங்கம் எம். பி, திரு. எ. எல். தம்பிஐயா எம். பி, திரு. வி. வீரசிங்கம் எம். பி, செனெற்றர் திரு. பி. நாகலிங்கம் ஆகியோரை அங்கு அழைத்து மொழிவேறு பாடற்ற வேதனம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்களிடம் நேரடியாகச் சமர்ப்பிக்க விருக்கிறார்கள். இவ் அரசியற்றலைவர்கள் என்னபதில் சொல்லக்கூடுமென்பதை ஆசிரிய உலகம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது.

### வித்துவான் சம்பந்தமூர்த்தி இலங்கை வந்துள்ளார்

இசை நூல்வல்லார் வேலூர் திருநாவுடையார் தேவார திருப்புகழ் பூஷணம் ரீ. எம். அப்பாத்துரை ஆச்சாரியாரின் புதல்வர் வித்துவான். ரீ. ஏ சம்பந்தமூர்த்தி அவர்கள் இலங்கை வந்துள்ளார். இலங்கை வானொலித் தமிழ்க் கலைமன்றத்தின் சார்பிலும் பிற சங்கங்களின் சார்பிலும் ஜிந்துப்பிட்டிக் கோவிலில் திரு. சம்பந்தமூர்த்தி அவர்களின் [illegible] நிகழ்ச்சிகள் நடைபெறும்.

# பாதை ஓரத்தில்

"பூமி திருத்தியுண்" என்பது ஓர் அருந்தமிழ் மொழி. பூமித்தாய் பொறுமையுள்ளவளானபடியால் அவளை வெட்டினுல் என்ன, கொத்தினுல் என்ன, எருமை மாட்டைப் பூட்டி உழுதால் என்ன, யந்திரக் கலப்பையாற் கிழித்தால் என்ன, பொன்னையும் மணியையும் தாராளமாகத் தந்துகொண்டேயிருக்கின்ருள்.

பூமியின்றேல் இயற்கை அன்னை தனது பரிமளிப்பையும் புன்சிரிப்பையும் எங்கே காட்டமுடியும்? இன்று பூமிதான இயக்கம் பாரதத்திற் பரந்து ஈழநாட்டையும் தாவிப்பிடித்திருக்கின்றதென்ருற் பொன்விளையும் பூமியின் மகிமை சொல்லி அடங்காதே! இதே பூமிதான் உலகிற் பெரிய சண்டை சச்சரவுகளையும் உண்டாக்கி விடுகின்றது. ஒரு குளி நிலத்துக்காகக் கோடேறி ஆயிரம் ஆயிரமாகச் செலவுசெய்வதில் தமிழ் மக்களை எவரும் மிஞ்சிவிடமுடியாது! ஒரு அடி நிலத்துக்காகப் பெரிய இராச்சியங்களே தவிடு பொடியாகி யிருக்கின்றன. இப்படிப் பரந்த உலகையோரடியால் அளந்தவர்களைபபற்றியும் நூல்களிற் படித்திருக்கின்ருேம்.

பெண்களுக்கு நகையாகவும் பணமாகவும் சீதனங் கொடுக்கும்போது மண்ணையுந்தான் சேர்த்துக் கொடுப்பார்கள். அதாவது வயல் நிலமாகவும் வாழ்மனையாகவும் உறுதிமுடித்து முத்திரையிட்டுக் கொடுப்பார்கள். இப்படியெல்லாம் மண்ணைக் கட்டியாள்பவர்களும் அதற்காக உண்ணுமற் குடியாமல் வயிற்றையும் வாயையுங் கட்டி வாழ்பவர்களும் என்ருே ஒருநாள் மண்ணேடு மண்ணுகித்தான் விடுகின்றனர். அப்படியிருந்தும் இந்த மண்மீதுள்ள ஆசை ஒருவரையும் விட்டபாடில்லை,

சமீபத்தில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி விவசாயப் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற இளைஞர் விவசாயச் சங்க விழாவொன்றில் வட பகுதியைச் சேர்ந்த 29 இளம் பெண்கள் நிலம் வேண்டி நிலவிருத்திப் பகுதியினருக்கு விண்ணப்பம் செய்துள்ளனர். யாழ்ப்பாணச் சரித்திரத்திலேயே இப்படியானதொரு சம்பவம் இதுவரை நடைபெறவில்லையெனச் சொல்லி இந்த 29 மெல்லியலாரையும் மாகாண அதிபதி திரு ம. ஸ்ரீகந்தா அவர்கள் தட்டிகொடுத்திருக்கின்ருர்கள். காணி நிலம் வேண்டி நிற்கும் இந்த இளம் மங்கையர்கள் மண்வெட்டியை எடுத்துப் பிடித்தால் எவ்வளவு குழியை வெட்டி எறிவார்களோ தெரியாது. இப்படி அவர்கள் வெட்டும்போது பயற்றங்காய் போன்ற அவர்களின் விரல்கள் கொப்புளித்துவிட்டால் அதற்கு மருந்து செய்வது யார்? காலிற் காயமேற்பட்டால் அதற்கு மருந்து செய்வது யார்? ஒருவேளை இவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் நிலத்தைக் காளைகளைக் கொண்டு பண்படுத்திப் பயிரிடுவதென எண்ணியிருக்கின்றனர்போலும். அப்படியாயின் அதுவும் வரவேற்கத் தக்கதொன்றுதான். ஏனெனில் வேலையின்றித் திண்டாடும் எத்தனையோ இளம் வாலிபர்களுக்கு அப் பெண்மணிகள் பிழைப்புக் காட்டுவதாகுமல்லவா?

— பாட்டைசாரி

### அபிமான நட்சத்திரம்

நாடகமே உலகம் என்ற காலம் போய் இப்போது சினிமா உலகமாகிவிட்டது. இந்த உலகத்தில் மின்னும் நட்சத்திரங்கள பலப்பல. இந்த நட்சத்திரங்கள்மீது அபிமானமுள்ளவர்களின் தொகை நாளொருமேனியும் பொழு தொருவண்ணமுமாகப் பெருகிக்கொண்டே வருகின்றது. இவர்கள் வெள்ளித் திரையில் தமது நட்சத்திரங்களுக்கு ஏதும் அவமானம ஏற்பட்டால் தாங்கவேமாட்டார்கள். இங்கிலாந்தில் ஒரு சினிமாக் கொட்டகையில் நடைபெற்ற சம்பவத்தை இதோ படித்துப்பாருங்கள்: அங்கு சிறுவன் ஒருவன் படம் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு கட்டத்தில் கதாநாயகன் வில்லனிடம் அகப்பட்டுத் தாறுமாருக அடி வாங்கினுன். தன் அபிமானத்துக்குரிய கதாநாயகன் அடி வாங்குவதைச் சிறுவனுற் சகிக்கமுடியவில்லை. அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. மறுகணம் தான் மென்றுகொண்டிருந்த 'சொக்கலேட்' துண்டைத் திரையில் தோற்றிய வில்லனுக்கு இலக்குவைத்து எறிந்தான். அது அப்படியே வில்லனின் முகத்தை அள்ளிக்கொண்டே போய்விட்டதென்று சொல்லுங்களேன்!

### பசை பூசாதே!

அரசாங்கக் காரியாலயங்களுக்குச் சென்று ஏதாவது காரியம் உடனே செய்து முடிக்க வேண்டுமானுற் சேவகன் தொடக்கம் ஒரு சில அதிகாரிகள் வரை 'சம்திங்' அல்லது, சந்தோஷங், கொடுத்தாக வேண்டுமென்பார்கள். நல்ல தமிழிற் கூறுவதாயின் அவர்களுக்குப் பசைபூச வேண்டும்! இந்த இரகசியத்தை இப்போதுதான் கொழும்பிலுள்ள அரசினர் வைத்தியசாலை நிர்வாகிகள் கண்டுபிடித்தனர். அடுத்த கணம் அவசர அவசரமாக ஒரு அறிக்கை வெளியிட்டனர். அதன்படி வைத்தியசாலையிற் கடமையாற்றும் உதவியாளருக்கோ வேறு உத்தியோகத்தருக்கோ கைக்குள் ஒன்றும் வைக்கக்கூடாதெனத் தெரிவித்திருக்கின்றனர். இந்த அறிவித்தல் சகல வைத்தியசாலைகளுக்கும் அனுப்பப்படும். அதனை அங்குள்ளவர்கள் பசைபூசித் துலாம்பரமாக ஒட்டினுலும் பசைபூசிப் பழகின கை அதை எதிர்பார்த்துக்கொண்டுதான் இருக்கும்.

# ஐக்கிய முன்னணி

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களை—1,000,000 இந்தியத் தமிழர்களை—ஒன்றில் நாடற்றவர்களாக்க வேண்டும்: அன்றேல் சிங்களம் பேசும் மக்களாக்க வேண்டுமென்பது அவர்கள் அடிப்படைத் திட்டம். மற்றைய 1,000,000 இலங்கைத் தமிழர்களுக் குள்ள வட கீழ் மாகாணங்களிலும், குடியேற்றத் திட்டத்தின் கீழ் சிங்கள மக்களைத் திணித்தும் வருகிருர்கள். மற்றும் பல பல முக்கிய சந்தர்ப்பங்களில், தமிழைத் தற்செயலாக, ஆனுல் சௌகரியமாக, மறந்து விடுகிருர்கள். இந்நிலையில், இன்றைய அரசாங்கமோ அன்றேல் இனிமேல்வரும் சிங்கள அரசாங்கமோ தமிழைக் கௌரவிக்கும்; அரியாசனத் திலேற்றும்; தாராள மனப்பான்மையுடன், தமிழரும் வாழத்தான் வேண்டுமென்று கவலை காட்டும் என்று மனப்பால் குடித்தல், பயனற்றதாகும்.

இப்போது தமிழர் உரிமை பேசுபவர்களை வகுப்புவாதிகள் எனமேடைகளில் நின்று தூற்றுகின்றனர்.

ஆனுல், காலப் போக்கில் பலர் உண்மையை உணர்ந்தார்கள்: அனுபவித்தார்கள்! இன்று தமிழன் நிலையை— தமிழ் அணங்கின் தவிப்பை— கண்டு கலங்குகின்ருர்கள். அரசாங்க உத்தியோகங்களுக்குத் தெரிவு நடத்தும்போதுங் கூட இந்த வகுப்பு வாதத்தைப் பெரும்பான்மையினர் பகிரங்கப் படுத்துவதை விளங்கிக் கொண்டார்கள்!

எனினும் ஒரு சிலர் இன்னும் கண்மூடித்திரிந்து, உரிமைக்குரல் எழுப்பும் தலைப்புதல்வரை வகுப்பு வாதிகள் என்று வாயாரத் தூற்றுகின்றனர். சிறுபான்மையினர் உரிமைக்கும் உடைமைக்கும் போராடல் வகுப்புவாதமென்று வசைபாடித் திரியும் தேசியவாதிகள் ஒரு சில கட்டிடங்களையுங் கோபுரங்களையும் காட்டித் தமிழனை ஏமாற்ற இன்னுந்தான் துணிகின்ருர்கள்! மானத்தமிழினத்தை . மந்தைக் கூட்டமென்று கருதும் இந்தத் தேசியவாதிகள் பிரசார வசதிகளுடனும் பிரசுராலயங்களின பேருதவியுடனும் இன்னும்வாழ முடிகிறது தமிழனின் துரதிருஷ்டம் தான்! ஆனுல் அண்மையில் நிறுவப்படவுள்ள தமிழர் ஐக்கிய முன்னணி அவர்களது வாழ்வுக்கு முற்றுப்புள்ளிவைக்கும் என்பது நம்பிக்கை. "அம்முன்னணி ஆபத்தானது: தமிழனின் மானத்தை வாங்கி விடக்கூடியது. வகுப்புத்துவேஷத்தை வளர்க்கக்கூடியது" என்றெல்லாம் கதறித் துடியாய்த் துடிக்கிருர்களே, சிலர்! ஆம்; அம்முன்னணியால் ஆபத்து ஈழத்தமிழ் மக்களுக்கல்ல: ஒரு சில சுயநலவாதிகளுக்கே என்பது மறுக்கமுடியாத உண்மை. ஈழத் தமிழர்களின் எதிர் காலத்தைப் பொறுத்தளவில், அம்முன்னணியொன்றே விமோசனத் திற்குள்ள ஒரேயொரு வழிப் பாதையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைநிறுத்தம் முடிந்தது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவித்தது. இப்போது ருஷியாவும் இலங்கையின் அங்கத்துவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காது என்ற நம்பிக்கைக்குச் சாதகமான சூழ்நிலைகள் உருவாகியுள்ளன. இப்போது கிட்டியுள்ள வசதியையும் வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு ஐ. நா. சபையினுள் நுழைவதற்கு நம்நாடும் தன்னாலான வரை பிரயத்தனம் செய்யவிருக்கிறது.

### மொழிச் சிக்கல்

சென்ற ஞாயிறு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் மொழிச்சிக்கலையிட்டுச் சுவைமயமான சர்ச்சைகள் நடைபெற்றன. யாழ்ப்பாண இந்துக் கல்லூரியினதும் அதனுடைய கிளைக் கல்லூரிகளினதும் பழைய மாணவர் சங்கங்கள் ஏற்படுத்திய இக்கூட்டத்திலே திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு ஜி. ஜி. பொன்னம்பலம். திரு ஜி. பி. மலலசேகரா, செனட்டர் எஸ். நடேசன் ஆகியவர்கள் பங்குபற்றினார்கள். முரண்பட்ட கருத்துக்களின் மோதல் இரசமான வாதப் பிரதிவாதங்களுக்குக் காரணமாக அமைந்தது. அவை வருமாறு:

**பேராசிரியர் மலலசேகரா**

இந்நாட்டின் மொழி ஐக்கிய சமுதாயத்தை மக்களிடையே இணைக்கும் வகையில் அமையவேண்டும். ஒரு நாட்டின் மொழிக்கு அதற்குரித்தான மதிப்பை அளிக்காவிடில் அத்தேசம் விடுதலையடைந்ததாகாது. உயர் கல்விப் போதனை மொழிக் குழுவை எதிர்நோக்கியுள்ள சிக்கல் யாதெனில் இரு தேசிய மொழிகள் நிலவுவதால் ஏற்பட்டுள்ள வேற்றுமைகளை நீடிப்பதா, அன்றேல் ஒரு மொழியைப் புறக்கணித்து மற்ற மொழியை நிலைநிறுத்துவதன்மூலம் பலநூற்றாண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டுவந்த அம்மொழியின் கலாசாரம் அழிந்தொழியச் செய்வதா என்பதேயாகும். இச் சிக்கலைத் தீர்க்கும் முயற்சியில் முன்னேற்றத்துடன் நடக்கத் தயாராகவிருந்தால் தியாகம் புரிவதற்குத் தயாராகவிருக்கவேண்டும். இத் தேசத்திலுள்ள பெரும்பான்மையோர் சிறுபான்மையோர் ஆகிய இரு சாராரும் அவ்வாறு தியாகம் புரிந்தாகவேண்டும்.

**இராணி அப்புக்காத்து செல்வநாயகம்**

அனைவரும் ஐக்கியமாயிருத்தல் வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஐக்கியமென்பதைப் பெரும்பான்மையோருடன் அவர்களைப்போன்று ஒரேமாதிரியாக வாழ்தல் என்று தவறாகக் கருதிவிடக்கூடாதெனப் பேராசிரியர் மலலசேகராவுக்குத் தெரிவிக்கவிரும்புகிறேன்.. 55 இலட்சம் மக்கள் 25இலட்சம் மக்களை விழுங்கியது உலக சரித்திரத்தில் ஒருபோதும் இடையாது.

**திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்**

ஓர் உறுதிவாய்ந்த தேசசமுதாயத்தை சிறுபான்மையினரின் உரிமையை மறுத்தும் நீதியாயத்தைக் குலைத்தும் உருவாக்க முடியாது. சம அந்தஸ்து, சம சந்தர்ப்பம், நீதிநியாயம் ஆதியவற்றைக்காட்டுவதன்மூலம்உறுதியானசமுதாயத்தை உருவாக்க முடியும்.

**செனட்டர் எஸ். நடேசன்**

உயர் கல்விக்குழு சுவிற்சர்லாந்து, கனடா, பின்லந்து, பெல்ஜியம் முதலான நாடுகளைப் பார்த்து அனுபவசாத்தியமான வழியை அடியிலிருந்து ஆராய்ந்து பிடிக்க வேண்டும்.

---

## பொதுத் தேர்தல் பெப்பிரவரியிலா?

பிரதிநிதிகள் சபை ஒக்டோபர்27ஆந் திகதி கலைக்கப்படுமெனவும் புதிய பொதுத்தேர்தல் பெப்பிரவரியில்நடைபெறுமெனவும் தெரிய வருகின்றது.

---

# தாய்மொழி உணர்ச்சி
# சிலரை ஆட்கொண்டு விடுகிறது
# தமிழ்மீதுள்ள பற்றுதலாற் சங்கடம்

**நகரசபை நடவடிக்கை : : ஈழகேசரி சிறப்பு நிருபர்**

யாழ்ப்பாணம் 23-9-55

தமிழ்மொழி நடவடிக்கைகள்பற்றி யாழ்ப்பாணம் நகரசபையில் சென்ற ஜனவரியில் ஆரம்பமான யுத்தம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. தமிழ்த்தாயை எப்படியும் அரியாசனமேற்றி அழகுபார்த்துவிட வேண்டுமென்ற கட்சிக்குத் தளபதியாகத் தலைமை பூண்டுள்ள திரு ஆ. துரைராசசிங்கம் எப்படியும் இரண்டிலொன்று பார்த்துவிட்டுத்தான் ஓய்வதெனக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். சில சமயங்களில் இந்தத் தாய்மொழி உணர்ச்சி அவரை அப்படியே ஆட்கொண்டு விடுகிறது. அதனாற் சபையில் ஏற்படும் அமளிகள் எத்தகையவாயிருக்கின்றன வென்பதைச் சென்ற மாதாந்தக் கூட்டத்திலுங் காண முடிந்தது.

இன்றைய நிலையில் தமிழ் மொழி மூலம் செய்யக்கூடிய சபை அலுவல்கள் யாவற்றையும் எவ்வித தவக்கமுமின்றி உடனடியாகத் தமிழில் நடாத்த வேண்டுமென்று திரு. துரைராசசிங்கம் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்து பேசுகையில் ஆங்கிலம் தெரிந்த உறுப்பினர்களுக்குத் தமிழ்மொழி நடவடிக்கையில் அக்கறையில்லையென்றும், தமிழ் தெரியாதவர் எவரும் இச்சபையில் இல்லையெனினும் திருவாளர்கள் மகாதேவா, நிக்கலஸ், நெவின்ஸ் செல்லத்துரை ஆகியோர் ஆங்கிலத்திற் பிரேரணைகள் கொண்டு வருவது வெட்கப்படக்கூடியதெனவும் கண்டித்தார். அவர் பேசி முடிவதற்கு முன்பே திரு. அல்பிரட் துரையப்பா இடையிற் புகுந்து ஆசனத்தில் இருந்தவாறே "நீங்கள் ஒரு தடவை ஆங்கிலத்திற் பிரேரணை கொண்டுவரவில்லையா?" என்று கேட்டார்.

திரு. துரைராசசிங்கம்:— சபையில் எழுந்துநின்று பேசவேண்டுமென்பது சட்டந் தெரிந்த உமக்குக்கூடத் தெரியாமற்போய்விட்டதே. மரியாதையாக நடந்துகொள்வதுதான் நல்லது.

இதனைத் தொடர்ந்து திரு. துரைராசசிங்கம் தன் பிரேரணையை ஆதரித்துப் பேசிமுடித்ததும் எல்லாக் காரியங்களையும் தமிழில் நடத்தமுடியாதென உதாரணத்துடன் திரு. நவரத்தினமும் தமது மறுப்பைத் தெரிவித்துக்கொண்டார். திரு. முத்துத்தம்பிக்குச் சபையின் கணக்குகளை எப்படித் தமிழில் எழுதமுடியுமென்பது பெரிய தலையிடியைக் கொடுத்திருக்கவேண்டும். அதை வெளிப்படையாகத் தெரிவித்த அவர், திரு துரைராசசிங்கத்தின் பேச்சின்படி பார்த்தால் சபைக் கணக்குகளை எழுத நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களைத்தான் வரவழைக்கவேண்டுமென்று நகைச்சுவையோடு சொன்னார். அடிக்கடி தமிழுரிமைக்காகப் பேசும் அவரிடமிருந்து பிறந்த இந்த விகடத்துணுக்கு அவ்வளவு சிரிப்புக்கு இடமளிக்கவில்லை. ஆனால் அடுத்துப் பேசிய திரு. நிக்கலஸ் 'நான் பண்டிதனுமல்ல, கடுந் தமிழ், இலக்கணத் தமிழ் ஆகியவற்றில் நிபுணனுமல்ல' என்ற பீடிகையோடு தொடங்கியது சபையிற் பெரிய கலகலப்பை உண்டாக்கிவிட்டது. அந்தப் பேச்சு முழுவதையும் கேட்டு அனுபவித்துச் சிரிப்பதற்கு இடம்வைக்காமல் பிரேரணையைப்பற்றிமட்டும் பேசுங்கள் என்ற மேயரின் ஆணை இடையில் நிறுத்திவிட்டது.

மேயர் மேற்கண்ட பிரேரணை பற்றிக் கூறிய சமாதானம் திரு. துரைராசசிங்கத்துக்கு ஆறுதலைக்கொடுக்கவில்லை. அவர் அதிக ஏமாற்றமடைந்தவர்போலக் காணப்பட்டார் என்பதைப் பின்னால் இருவருக்குமிடையில் நடந்தவிவாதம் எடுத்துக்காட்டியது.

திரு. துரைராசசிங்கம்: இவ்விஷயம்பற்றி மேயர் மழுப்புகிறாரென்று உண்மையாகக்கூறுகிறேன்.

மேயர்: நான் மழுப்புகிறேன் என்பதைநிரூபியுங்கள். உங்கள் குறிப்பு மனம்வருந்தக்கூடியது. தமிழில் சகல நடவடிக்கைகளையும் உடனே மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட எனக்கு அதிகாரமில்லை. இந்தச் சபையில் ஒரேயொரு அங்கத்தவருக்குத்தான் ஆங்கிலம் தெரியாது. இருப்பினும் ஆங்கிலத்திற் பேசுபவர்களையெல்லாம் நான் தமிழிற் பேசுமாறு அவ்வப்போது கேட்டு வருகிறேன். இதை உணராமல் எனது நிர்வாகத்திற் குறைகூறுவது முறையல்ல.

திரு. துரைராசசிங்கம் மழுப்பல் என்ற பதத்துக்கு விளக்கம் தந்தார். மேயரைக் கண்டிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நான் அப்பதத்தை உபயோகிக்கவில்லையெனவும் அவர் சொன்னார். இந்தச் சமாதானத்தைப் பின்னால் மேயர் ஒருவாறு ஏற்றுக்கொண்டதாகத் தெரிந்தது.

திரு. கார்த்திகேசன்: தமிழ்மொழி நிர்வாகம் பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்த உபசபைக் கூட்டத்துக்குக் கிரமமாக வந்திருப்பின் அதன் நிலைமை இப்படியாகியிராது. திரு. மகாதேவா: இருந்தாலும் எல்லோரும் தமிழிற் பேசவேண்டுமென்று திரு. துரைராசசிங்கம் கட்டுப்படுத்தமுடியாது.

மேயர்: இதனை நான் முன்பே சொல்லிவிட்டேன்.

திரு. துரைராசசிங்கம்; எனக்காக அப்படிச் செய்யுங்களென்று நான் சொல்கிறேன்.

திரு. மகாதேவா; நமக்கும் தமிழ மொழியில் பற்றுதலுண்டு. சில கஷ்டங்களை உணர்ந்தே முற்றிலும் தமிழில் நடத்தமுடியாதென்றுசொல்கிறேன்.

இச் சந்தர்ப்பத்தில் மேயர் தலையிட்டு இந்த விவகாரத்தை அடுத்த கூட்டத்துக்குத் தள்ளிப் போடலாமெனறு சொல்லிச் சபையில் அமைதியை நிலைநாட்டினர்.

---

# நாடற்று நிற்கும் மக்கள் நிலை?

தன்னம்பிக்கை யுடனும் நல்லெண்ணத்துடனும் தீர்க்கப்பட முடியாத சிக்கல்களேயில்லை. இந்தியா சம்பந்தப்பட்ட மட்டில் இலங்கைமீதும் இலங்கை வாழ் இந்தியர்மீதும் அதற்குப் பரிபூரண நம்பிக்கையும் நல்லெண்ணமும் உண்டு. இலங்கை இந்தியர் சிக்கலுக்குத்துரிதமாகவொரு முடிவு ஏற்படவில்லையே என்று எவரும் பொறுமையை இழக்கத் தேவையில்லை. இவ்வாறு இந்திய மக்கள்சபை அங்கத்தவரும் — பம்பாய் காங்கிரஸ் தலைவருமான திரு பட்டீல் இந்தியன் கிளப்பில் நடைபெற்ற ஒருகூட்டத்திற் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்தியச் சிக்கலைத் தீர்ப்பதற்கு அன்னார் தெரிவித்துள்ள கருத்து ஆலோசனைக்குரியது. இலங்கையில் வாழும் இந்திய பரம்பரையினருக்குக் குடியுரிமை அளித்தால் குடிமூழ்கிப் போகாதென்ற நம்பிக்கை இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படவேண்டும். இந்த வகையெதுவுமின்றிக் குடியுரிமையைத் தட்டிக்கழிப்பதற்கான எண்ணத்துடன் செயலாற்ற முற்படில் இதனை ஒழுங்காகச் செய்யமுடியாது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் கீழ்க்காணும் வாக்குறுதிகளை அளித்திருந்தது:

1. இந்தியா பாகிஸ்தானியர் குடியுரிமைப் பதிவுச்

**இலங்கைத் தமிழன்**

சட்டம் நியாயமான முறையில் வழிநடத்தப்படும்.

2. குடியுரிமைப் பதிவு முடிந்ததும் இரண்டு வருடங்கட்குப்பின் நாடற்றவர்களின் சிக்கலை இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

3. அதற்கிடையில் இவர்கள்விஷயத்தில் பாதகமான நடபடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது.

நடைமுறையிற் பார்த்தால் இலங்கை அரசாங்கம் முதல் வாக்குறுதியை நிறைவேற்றுவதாகக் காணோம். சில விண்ணப்பங்கள் குடியுரிமை அதிகாரிகளால் விசாரிக்கப்பட்ட வகைதொகையின்றி [illegible] றங்களில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆகவே நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குடியுரிமையைத் தட்டிக்கழிப்பதற்காகவே பணியாற்றுகின்றனரோ என்னவோ.

இலங்கைக் குடிகளல்லாதவர்கள் பிரிட்டிஷ் குடிகளாகச் சகல உரிமைகளுடனும் வாழ்ந்துவரலாம் என்று இருந்துவந்தது. இலங்கைக் குடிகளாக ஏற்றுக்கொள்ளாதவர்களும், இந்தியக்குடிகளாகஏற்றுக்கொள்ளாதவர்களும் நாடற்றவர்கள் என்ற புதிய பட்டத்துடன்நடைப்பிணங்களாகத் திரியவேண்டிய நிர்ப்பந்தம் இன்றுருவாகியிருக்கின்றது. ஆகவே இந்நாட்டில் பிறந்து வளர்ந்து இந்நாட்டுக் குடிகளுடன் ஐக்கியமாகிவிட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர் இந்நாட்டில் வாழத்தான் செய்கிறார்கள், அவர்கள் தாம் இலங்கையிற் பிறந்து வளர்ந்ததையோ இந்தியாவில் தமது முன்னோர்களின் இடங்களையோ அத்தாட்சிப்படுத்த முடியாமலிருக்கிறார்கள். இவர்கள் கதியென்ன? இந்த அழகில் இலங்கையும் இந்தியாவும் நாடற்ற ஒரு புதிய மக்கள் கூட்டத்தினரை உற்பத்தி செய்யாதிருக்கட்டும்.

---

**அமுதமொழி**

தமிழினைப்போல் உயர்ந்த மொழி தரணியில் வேறெங்குமிலை, தமிழனைப்போல் மொழிக் கொலையில் தலைசிறந்தோர் எவருளரோ!

—திரு. வி. க.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம் இல.11792.

ஏழாலை
வல்லிபுரம் சின்னத்துரை
வழக்காளி

ஏழாலை
1. வேலன் வெள்ளையன்
2. பெண் குட்டி
3. சின்னட்டியன் தம்பன்
4. பெண மாணிக்கம்
5. அருச்சுனன் கைம் பெண் அருமை
6. இ. அருணன் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் 11792ஆம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள், 1955ஆம் ஆண்டு ஒக்டோபர் (ஐப்பசி) மாதம் 21ஆந் திகதி (21-10-55) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்தஏலத்தில்விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1100/உம், இதில் ரூபாய் 1000/க்கு 11-10-54 திகதி தொடக்கம 2-12-54 திகதி வரைக்கும் 100க்கு 8 வித வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வித வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 230-78சதமும். இதில கோட்டுச் செலவில் ரூபாய் 100 இறுபட்டது.

**காணிகளின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகக் கோவிற்பற்று, ஏழாலையிறை "கோட்டைக்காடு" நிலப்பரப்பு இரண்டு (2உம்) வீடுகளும், வடமேற்கு மூலையில் இருக்கும் கிணற்றிற்பங்கும் வழிவாய்க்கால் தூரவை ஆடுகால் உரித்தும் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை; கிழக்கு, கதிரன் முத்தனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு, குருநாதன் இளையவனின் ஆதனம். மேற்கு, இராமன் குட்டிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும் முறபதிவு $14\frac{2}{1}\frac{1}{33}$.

2. மேற்படி ஏழாலையிறை "குறுவன் கலட்டி" நிலப்பரப்பு இரண்டு (2உம்) குளி $11\frac{1}{4}$ உம். தெனமேற்கு மூலையில் இருந்து 2 முள அகலமுள்ள ஒழுங்கைப் பாவிப்புரித்தும் எல்லை; கிழக்கு, சரவணமுத்தி பெண் இராசம்மாவின் ஆதனம. வடக்கு முருகன் வயிரவனின் ஆதனம, மேற்கு, இளையவன பசுபதியின் ஆதனமும் ஒழுங்கை முகப்பும். தெறகு இளையவன செல்லப்பனின் ஆதனம் இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை, 20-9-1955 [A209]

---

## தமிழும் சிங்களமும்
### அரசகரும மொழிகள்

அரசியல் அமைப்புத் திட்டத்தின் 29 ஆவது உப விதிக்கமையத் தமிழும் சிங்களமும் சம அந்தஸ்துடன் அரச கரும மொழிகளாக அமைந்து வருமென முதலமைச்சர் சேர் ஜோன் சென்ற 22-9-55 வியாழக்கிழமை பிரதிநிதிகள் சபையில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

**வான விளிம்பில் அந்தகன் கோரப் பல்லைப்போல் வளர்பிறை தோன்றியது. அதன் ஒளியில் இரண்டு மன்னர்களையும் பார்த்துச் செயலற்று நின்றுகொண்டிருந்தான் மாறன்.**

# வடக்கிருந்தோர்

இ. புஷ்பராஜன்

அன்று மதுரையிலே கோலாகலமான திருவிழா. மீனாட்சியம்மன் கோயில் மணிகள் பாண்டிய மண்டலத்தையே நாதவெள்ளத்தில் ஆழ்த்தின.

அரண்மனையின் உட்புறத்தே கலைவாணர்கள் அமுதகானத்தை அள்ளிச் சொரிந்தவண்ணமிருந்தனர். இன்னிசைக்குக் கட்டுப்படும் நாகத்தைப்போற் போர்வீரர்கள் இசையின் போதையில் மயங்கிக் கிடந்தனர்.

கிண்கிணியின் நாதமும், போர்வீரர்களின் வீரமுரசொலியும் வீதியிலே மிதந்துவருகின்றன. இவையெல்லாம் எதிரியின் படையை வெற்றிகொண்ட வீரத்தின் பிரதிபலிப்பென்றுதான் யாவருக்கும் எண்ணத் தோன்றும். ஆனால் உண்மை யாதெனின் குழந்தைப்பேறில்லாது தவித்துக்கொண்டிருந்த மன்னனுக்குப் பாண்டிமாதேவி ஒரு வாரிசை ஈன்றதேயாகும்.

தன் இலட்சியக் கனவு பலிதமானதையிட்டு மகிழ்ந்த மன்னன், தன் கொலுமண்டபத்திற் கலையின்பத்தை நுகர்ந்துகொண்டிருந்தான். கலை தனக்கே சொந்தமானது என எண்ணிக்கொண்டு உப்பரிகையிலிருந்து இறங்கி வந்தாள் கலாராணி. அவள் அணிந்திருந்த ஆடையின் வேலைப்பாடுகள் பிறநாட்டவரைத் திகைக்கச் செய்வனவாயிருந்தன. ஆரத்தில் பதிக்கப்பெற்ற முத்துக்கள் கதிரொளியை நோக்கி ஏளனம் செய்வனபோல் ஒளிவீசின.

அவளின் அங்க அசைவிலே மத யானையைத் திசை கலங்கச்செய்யும் ஆற்றல் பெற்ற அறப்போர் வீரர்கள் ஆட்டங்கொடுத்தனர். பாராள்வோன் பார்க்கின்றான். சிந்தையை அள்ளும் அச் சிங்காரியின் நடனம் அவன் முகத்திலே புதுமலர்ச்சியை உண்டுபண்ணுகிறது. பாட்டுக்கேற்றவாறு தாளமிடும் அந்த நர்த்தகி காலில் அணிந்திருக்கும் சிலம்பின் ஒலியிலே மிதந்து வரும் நாதம் அவன் பெற்ற வெற்றிகளின் முரசொலியாகக் கேட்கிறது.

ஆட்டத்தின் கவர்ச்சியில் மனதைப் பறிகொடுத்துக் கொண்டிருந்த அந்தச் சபையின் நடுவிலே பாண்டிநாட்டின் ஒற்றர்களில் ஒருவன் ஓடிவந்து "அரசே! சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சேரநாட்டுச் சூழ்ச்சிக்கூட்டம் நம் தாயகத்தின்மேற் படையெடுத்து வருகிறது" என்றான்.

"யார் சேரனா? பட்டதை மறந்து விட்டானா? அன்றேல் மீண்டும் புதுப் பாடம் படிக்க விரும்புகின்றானா? ஈட்டி முனைகண்டு இமை கொட்டியவன்; கோழை! வீரத்தைத் தன் இதயகீதமாக்கிக் கொண்டவன் பாண்டியன் என்பது அவனுக்குத் தெரியாதா?

"செந்தமிழ் நாட்டில் அக்கொடுந்தமிழ்க் குள்ள நரிகளை அடியெடுத்து வைக்க விடுவதா?"

பாண்டியன் நெஞ்சம் குமுறியது.

அவையிற் குழுமியிருந்தோர் பாறைகளாயினர். ஆயினும் அவர்களது கரங்கள் உறையிலிருந்த வாளை உருவிக் கொண்டுதானிருந்தன.

பாண்டியன் சூளுரைத்தான், "மாற்றான் நம் தாய்நாட்டின் மண்மேல் காலெடுத்து வைக்குமுன் மண்டியிடச்செய்வோம் அந்த மடையர்களை, அல்லாவிடின் மாதாவின் மண்ணுக்காக மார்பிலே ஈட்டியேந்தி மாய்ந்தொழிவோம்"

கம்பத்திற் கட்டப்பட்டிருக்கும் மத்தளம் காற்றினால் தட்டப்பட்டு ஓசையை உண்டாக்கினாலும் போர் என்றதும் பெருமிதத்துடன் புயம் நிமிரும் தமிழர்கள் தம் சொந்த நாட்டிலே சுயநல நோக்கோடு போர் தொடுக்கும் அந்நியனை அடியெடுத்து வைக்க விடுவார்களா?

அலையெனத் திரண்டனர் — வேலுக்கு வேல், வில்லுக்கு வில், வாளுக்கு வாளால் பதிலிறுக்க.

"வேந்தே! தாங்கள் எதற்காகப் போர்முனைக்குப் போகவேண்டும்? சூழ்ச்சிக் கூட்டத்தை முறியடித்துச் சேரனின் கைகளில் விலங்கிட்டுத் தங்கள் பாதத்தை மண்டியிடச் செய்கிறேன். என்னை நம்புங்கள். எதற்கு உங்களுக்கு வீண் சிரமம்! தாங்கள் அரண்மனையிலேயே இருங்கள்" —மன்னனின் அன்புக்குப் பாத்திரமான தளபதி 'மாறனின் கூற்று இது.

"மாறா! என்ன வார்த்தை சொன்னாய்? பாண்டி நாட்டு மன்னர்கள் தங்கள் மக்கள் மேல் நம்பிக்கையற்றவர்களாய் வாழ்ந்தார்களா? அன்றேல் பாண்டி நாட்டின் சரித்திரத்திலே மக்கள்மேல் நம்பிக்கையற்ற மன்னர்களைக் குடிகள் தாம் வாழ விட்டார்களா? கிடையாது.

ஒன்றை மட்டும் சிந்தித்துப் பார். போர் முனைக்குச் சேரனின் படைகள் மட்டுந்தான் வருகின்றனவா? இல்லையே! சேரன் அல்லவா படை நடத்துகிறான். அவனை வரவேற்கப் போர்முனையில் நான் இல்லையென்றால் சேரன் என்னைப்பற்றி என்னதான் எண்ணுவான்? தன் வாள்முனைக்குப் பயந்து பாண்டியன் படைநடத்த வரவில்லை என்று ஏளனம் செய்ய மாட்டானா?" அது இந்நாட்டு மக்கள் எல்லோருக்குமே அவமானமல்லவா? நாட்டு மக்களுக்கு அவமானத்தை உண்டு பண்ணும் செய்கையில் நான் ஈடுபடின் மக்கள் என்னைப் பற்றி என்ன எண்ணுவார்கள்?

"நம்மக்கள் என்னை மன்னித்தாலும் மற்றைய நாட்டவர் என்னை மதிப்பார்களா? மக்களைப் பலிகொடுத்துச் சுகவாழ்வு வாழ எண்ணும் கோழை! என்று தூற்றமாட்டார்களா? சிந்தித்துப்பார்த்து ஒரு நல்லமுடிவுக்கு வாருங்கள்"

"மன்னன் வாழ்க! மாதாவின் மண்மேல் மாற்றான் கால்பட இடமளியோம். வாழ்க நற்றமிழ்!" என்ற கோஷங்கள் வானைப் பிளந்தன.

* * *

விண்ணதிர இடிமுழக்கம் செய்துகொண்டு வந்த சேரனின் படையுடன் பாண்டிய நாட்டின் எல்லையில் பாண்டியன் படைகள் மோதின.

கோர யுத்தம். இரு பக்கத்திலும் எண்ணற்ற வீரர் இரத்த வெள்ளத்தில் மிதந்தனர். யானையினின்று போர்புரிந்தோர் திக்குத் திசை தெரியாமல் வந்து தாக்கிய ஈட்டிகளை மார்பின் மேல் தாங்கிக்கொண்டு மண் மீது உருண்டனர். [illegible] யானைகள் பிளிறிக்கொண்டு மனித உடல்களை இடறிச் சென்றன. வேலின் தாக்குதலால் காயப்பட்ட புரவிகள் திசைகெட்டு ஓடின. ஆங்காங்கு தேர்கள் உடைந்து விழுந்தன.

பாண்டியனும் சேரனும் நேருக்குநேர் பொருதினர். அவர்கள் வாள்வீச்சு மின்னொளியை உண்டாக்கியது. சூழ வந்த சேரனின் வீரர்களெல்லாம் பாண்டியனின் வாளின் சுழற்சியிலே அகப்பட்டு அங்கவீனர்களாயினர்.

இக் கோர யுத்தத்தை வான வெளியில் வட்டமிட்டவாறு கழுகுக் கூட்டங்களெல்லாம் பார்த்து மகிழ்ந்தன. பற்றையின் மறைவிலே பதுங்கி நின்று வேடிக்கை பார்த்தன நரிக் கூட்டங்கள். வீரர்களின் உடல்கள் துண்டாகும்போது பெருகியோடுங் குருதி வெள்ளத்தைக் குடிக்கச் சந்தர்ப்பம் அளித்த யுத்தத்தை வாழ்த்துவன போல் அவை ஊழையிட்டன.

பாண்டிய மன்னன் தன்னை நெருங்கிய சேரனின் படை வீரன் ஒருவனின் உயிரைக் குடிப்பதற்காக வாளைச் சுழற்றினான், அடுத்த கணம்......பூகம்பம் ஏற்பட்டதுபோன்ற அதிர்ச்சி யுண்டானது, சேரன் தன் புரவியில் தாவி வெகு விரைவாய் யுத்த களத்தைவிட்டு மறைந்துவிட்டான்.

யுத்தகளம் அல்லோகல்லோலப்பட்டது. தலைவனைக்காணாத சேர சைனியம் சிதறுண்டு ஓடியது. அந்த வேகத்தில் யுத்த களத்தில் துண்டிக்கப்பட்டுக் கிடந்த வீரர்களின் உடல்கள் யாவும் அத்திகளின் அடியில் அகப்பட்டுக் குருதி வெள்ளத்தில் குழைந்தன.

சேரன் மறைந்துவிட்டான். தலைவனை இழந்த படைகள் தவித்தன. இதைப் பயன்படுத்திக்கொண்டு ஓடும் சேரனின் படையை வேட்டையாட மீனவன் மனமொப்பவில்லை. உடனே போரை நிறுத்தும்படி உத்தரவிட்டான்.

பாண்டியவீரர்கள் வெற்றிச் சங்கம் முழங்கினர். 'வாழ்க தென்னவன்' 'வாழ்க செந்தமிழ்' என்னும் கோஷங்கள் வான் முகட்டில் முட்டி எதிரொலித்தன. வெற்றியின் களிப்பில் அவர்கள் ஆடிப் பாடிக்களித்தனர். ஆனால் அக் களிப்பிலே மலர்ந்திருக்க வேண்டிய பாண்டியனின் வதனத்தைச் சிந்தனை திரையிட்டிருந்தது. சேரனின் மறைவினால் சோபையற்றுக் காணப்பட்டது.

வீரத்தின் விளம்பரமாய் விளங்கிய சேர வமிசத்தின் வழித்தோன்றல், கேவலம் கோழைபோல் ஓடியொளித்தான். அதை முடிவுகட்ட அவன் மனம் ஒப்பவில்லை.

வான் தொட்டபின் மாற்றாரின் கால் தொட்டறியாச் சேர குலக்கொழுந்து பேடிபோல் ஓடுவானா? இல்லை, ஒருகாலுமில்லை. ஏன்? அவனும் செந்தமிழ் மகன்தானே! உனதுடலின் இரத்தமே அவனிலும் ஓடுகிறது. சேரனுக்கு ஏதோ அவமானம் நேர்ந்திருக்கவேண்டும். பாண்டியன் உள்ளம் இந்த முடிவுக்குத்தான் வந்தது. ஆம், அப்படித்தான். அவன் வெற்றியில் இறுமாந்த உள்ளத்தில் ஒருவித அதிர்ச்சி ஏற்படத்தான் செய்தது.

* * *

போர்க்களத்தில் உயிரற்றுக் கிடக்கும் சடலங்களைக் காணச் சகியாத கதிரோன் மேலை வானை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தான்.

யுத்தகளத்து உதிரச் சாயல் அவனை மேலும் சிவப்பாக்கியது. 'நாங்கள் இங்கேதான் கிடக்கிறோம்' என்று சொல்லிச் சடலங்களின் பச்சைரத்தம் ஆதவனை ஆராத்தி செய்வதுபோல் அவன் செல்லும் திசையெல்லாம் இரத்தமயமாக்கின.

கோர யுத்தம் நடைபெற்ற இடம் அமைதியடைந்தது. அந்த மயான அமைதியில் களத்தினூடாக இரு உருவங்கள் நடந்துகொண்டிருந்தன. களத்தில் கிடக்கும் பிண்டங்களைக் காணச் சகியாததாலோ என்னவோ அவர்களின் முகங்கள் மேற்குத்திசையில் மறையும் ஆதவனைப் பார்த்தபடி செல்லுகின்றன. அந்த உருவங்கள் வேறு யாருமல்ல, பாண்டியனும் அவன் சேனைத்தலைவன் மாறனுமே!

பாண்டியன் விழிகள் சுத்திட்டுகின்றன. நன்றாகப் பார்த்தான். அவர்கள் செல்லும் திசையில் ஓர் உருவம் வடக்கே பார்த்தபடி நிஷ்டையில் இருப்பதைப்போற் காணப்பட்டது. மாறனும் அதைக் கவனித்தான். அவன் "வேந்தே! யாரோ ஒருவன் எங்கள் எல்லையிலே வடக்கிருக்கிறான்போலத்தெரிகிறது. "என்ன எனது எல்லையிலா?" கூர்ந்து கவனித்த பாண்டியன் ஒருகணம் திகைத்துவிட்டான். அந்த உருவம்!

அது வேறுயாருமல்ல, சேரனே! பாண்டியன் உள்ளம் அவமானத்தால் குன்றியது. அவன் உள்ளத்திற் சிந்தனை அலைகள் வீசின.

பாண்டிநாட்டிலே ஒருவன் வடக்கிருந்து மாய்கிறான் என்றால் அந்நாட்டு மன்னனின் அநீதிதான் அதற்குக் காரணமாயிருக்கவேண்டும். குடிகளின் நலன்கருதி கோலோச்சும் பாண்டிய வேந்தன் சேரனுக்கு என்ன அநீதியைச் செய்துவிட்டான். கலமுடைந்து ஆற்றிலே தத்தளிக்கும் உயிருள்ள உடல்போல் பாண்டியன் துன்புற்றான்.

நெருங்கிச்சென்ற பாண்டியன் சேரனின் கையைப் பிடித்தவாறு, "நண்ப! எதற்காக வீணான சாவு! எழுந்திரு. உனக்கு என்ன அவமானம் நேர்ந்துவிட்டது? அதற்குப் பிராயசித்தமாக எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் தந்துவிடு! ஏற்றுக்கொள்

(தொடர்ச்சி 12ஆம்பக்கம்பார்க்க)


## இலக்கிய மஞ்சரி

(3, 4, 5, 6, 7ஆம் புத்தகங்கள்)

(வித்தியா பிரசுர சபையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன)

சுவைத்துத் தாமே கற்கவேண்டிய ஒரு பாடத்தை வற்புறுத்தலின்பேரில் மனனமாக்கி நரகவேதனையை அநுபவித்த மாணவரையும், ஓரளவிற்கு ஆசிரியரையும் மேற்படி கஷ்டத்தினின்றும் நீக்க இவ் விலக்கிய மஞ்சரித் தொகுதிகள் உதவி புரியும். பாலரின் மனப் பண்புக்கும் அவர்களது இரசஞான விருத்திக்கும் பொருத்தமான பாடங்களை இந் நூல்கள் கொண்டுள்ளன.

இந் நூல்கள் ஆங்கில, தமிழ்ப் பாடசாலைகளில் 3, 4, 5, 6, 7ஆம் வகுப்புக்களிற் கற்கும் மாணவருக்குத் தமிழ் இலக்கிய பாட புத்தகங்களாக உபயோகிக்கத் தகுந்தவை.

| | | ரூ. ச. |
|---|---|---|
| மூன்றும் புத்தகம் | — | -60 |
| நான்காம் ,, | — | -65 |
| ஐந்தாம் ,, | — | -75 |
| ஆறும் ,, | — | 1-00 |
| ஏழாம் ,, | — | 1-25 |

**சுன்னுகம்: தனலக்குமி புத்தகசாலை**

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்


## சிறுகதை எழுத்தாளருக்கு:

இனிமையான சிறுகதைகளை ஈழகேசரி வரவேற்கின்றது. கதைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். இப் பத்திரிகையின் ஒரு பக்கத்தில் (5 பத்தி) அமையும் கதைகள் சிறப்பாகக் கவனிக்கப்படும். கதைகளின் தகுதி பற்றி எவ்வித கடிதப் போக்கு வரவும் வைத்துக்கொள்ளப்படமாட்டா. போதியளவு முத்திரை சேர்த்தனுப்பினாலன்றி ஏற்றுக்கொள்ளப் படாத கதைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# கொழுகொம்பு

வ. அ. இராசரத்தினம்

## அத்தியாயம் 11

உள்ளமும் உடலும் ஒருங்கே குன்றிப்போய்விட்ட நடராஜன் சுள்ளென்றெறிக்கும் காலை வெய்யில் முதுகைத் தீய்த்துக்கொண்டிருக்கையிற் சித்தன் போக்குச் சிவன் போக்காக நடந்துகொண்டிருந்தான், தனது தந்தையாரும், மாமனாரும் சில நாட்களாக ஆளுக்காள் மனத்தாங்கலாக இருக்கும்போது, அதைக்கண்டால் நடராஜனுக்கு இருவர்மேலும் அநுதாபமாகத்தானிருக்கும். இந்தச் சிறிய விஷயத்தை இவ்வளவு தூரம் தூக்கிப் பிடித்துக்கொண்டு மனவருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே என்று அவனுக்கு வருத்தமாயும் இருக்கும். அவர்களை வெறும் மடையர்கள் என்றுகூட அவன் நினைத்ததுண்டு. ஆனால் அதேபோன்ற ஒரு சிறிய விஷயத்தால் தன் மனம் இத்தனை சஞ்சலப்பட நேரிடும் என்று அவன் எதிர்பார்த்திருக்க முடியாது. ஏனென்றால் மனித உள்ளம் விசித்திரமானது. தாயுமானவர் பாடியதைப்போல அதற்குச் சும்மாவிருக்கின்ற திறமை கிடையாது. தன் மாமனார் சொல்லிய அந்த வார்த்தைகளையே திருப்பித் திருப்பி எண்ணிக்கொண்டிருந்தது அவன் மனம்! ஆம், எந்த விஷயமாயினும் அது மானமோ அவமானமோ தனக்கு நேரிடும்போதுதான் அதன் பலாபலன்களை ஒருவனால் நன்கு உணர முடிகிறது.

அவன் மாமனார் அவனிடம் இத்தனைகாலமும் அன்பாகத்தான் இருந்தார். அத்துடன் மரியாதையாகவும் இருந்தார். அப்படியிருந்த அவரே, இன்று அவனை "இங்கே வரவேண்டாம்" என்று சொல்லியதை அவன் எண்ணிப்பார்க்கையில் அவமானத்தினால் அவன் உள்ளம் சுக்குநூறாக வெடித்துவிடும்போல் இருந்தது. முன்னங்கால்கட்குள்ளே தலையைப் புதைத்துக் கொண்டு நடக்கும் தெரு நாயைப்போல அவன் நடக்கையில், நாயைத் துரத்துவதைப்போல தானும் துரத்தப்பட்டு விட்டேனே என்று அவன் எண்ணமிடுகையில், இன்பக்கனவுகளின் உச்சியிலே பூரித்திருந்த அவன் இதயம் இப்போது அவனுள்ளே மௌனமாகக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தது. ஆனால் நல்லகாலமாகத் தான் துரத்தப்பட்டது வேறு எவருக்குமே தெரியாது என்று அவன் எண்ணுகையில் அந்த எண்ணமே அந்தகார இருளில் தோன்றும் மின்னற் கீற்றைப்போல அவனுக்கு ஓர் ஆறுதலாக இருந்தது. அந்த விஷயம் மூன்றும் பேருக்குத் தெரிந்திருந்தால் அவன் தற்கொலை செய்யத் துணிந்துவிடுவான் போல இருந்தது; அவன் மனநிலை!

ஆனால் இந்தச் சம்பவத்தை வேறு எவருக்குமே தெரியாமல் மூடி வைக்க வேண்டும் என்று அவன் திட்டமிட்டுக்கொண்டே நடக்கையில், பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்ட இனிமையான திராட்சை ரசம், போதையைக் கொடுக்கும் மதுவாக மாறுவதைப்போல, அவன் சோகமான, வெறுப்பான எண்ணங்கள் பயங்கரமாய்ப் பழிவாங்கியே தீரவேண்டும் என்ற வஞ்சினமாய் விஸ்வரூபம் எடுத்தன.

அவமானம், வெறுப்பு, பழிவாங்கும் எண்ணம் ஆகிய பல்வேறு உணர்ச்சிகளும் சேர்ந்து அவன் மனம் குழம்பிக்கொண்டிருக்கையிலும், அம் மனத்தின் எங்கோ ஒரு மூலையில் கனகத்தின் எண்ணம் தோன்றத்தான் செய்தது. இதற்கு முன்னெல்லாம் கனகம், நடராஜன் மனதில் பாரதியார் மங்கியதோர் நிலவினிலே கனவிற் கண்ட பதினாறு வயது இள மங்கையாக, இன்ப நினைவுகளாக, ஆனந்தக் கனவாக, அழகு வடிவாகத்தான் தோன்றுவாள். ஆனால் இப்போது அவன் மனத்திலே கனகம் ஒரு சோக சித்திரமாகத்தான் தோன்றினாள். அணையவிட்ட நெருப்புத் தணல்போல அவள் நிறமே சாம்பர் பூத்து வெளிறிப்போயிருந்தது. கட்டாந்தரையிலே பசுந் தழையைத் தேடியலையும் வெள்ளாட்டின் கண்கள்போல அவள் கண்களும் கலங்கி வட்டமாய் வெளிறிப்போயிருந்தன. அந்தச் சோக சித்திரத்தைப் பார்க்கையில் அந்த வெறுப்பான எண்ணங்களிடையேயும் அவன் மனம் கனகத்துக்காக இரங்கியது. அந்த இரக்கத்தில் நடராஜன் நடையே தளர்ந்தது. அவன் மெதுவாக—மிகவும் மெதுவாக—நடந்துகொண்டிருக்கையில் "அத்தான்! என்மீதா பழிவாங்கப் போகிறீர்கள்?" என்று கனகம் கேட்டது அவன் காதுகளில் விழுந்தது. நடராஜன் மேலே நடப்பதை விட்டு அப்படியே கல்லாலடித்த சிலைபோல அசையாமல் நின்று பின்னாற் திரும்பிப் பார்த்தான்.

வீட்டிலே கனகத்தின் தந்தை கந்தையாவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். ஆம், அவர் தன் மைத்துனன் மேலிருந்த கோபத்தில் எப்படியோ நடராஜனை, "நீ இங்கு வரவேண்டாம்" என்று சொல்லியே விட்டார், ஆனால் அதைச் சொல்கிறபோது நடராஜன் முகத்தைப் பார்க்கவே அவருக்குத் திராணியில்லை. அதைச் சொன்னதுதான் தாமதம். தன் தோளிற் கிடந்த துண்டினால் நீரை யுகுக்கும் தன் கண்களையே துடைத்துக்கொண்டு ஓட்டமாகவே வீட்டுக்குள் வந்தவர், மனமிடிந்துபோய்க் கதிரைக்குட் சரிந்துவிட்டார். மனிதரிற் சிலர் இருக்கிறார்கள், மேலே பாறையாய் வைரித்து உள்ளே அனற்குழம்பாய் உருகிக்கொண்டிருக்கும் பூமித்தாயைப்போல அவர்கள் மனத்திலே இரக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். போலிக் கௌரவமும் வரட்டு உணர்ச்சியும் அவர்கள் வெளித்தோற்றத்தைக் கடுமையாக்கி விடுகின்றன. கந்தையாவும் இப்படியான மனிதர்களில் ஒருவர்தான்.

மனமிடிந்து போய்க் கிடந்த அவரினுள்ளே அவர் வாலிபப் பருவத்து எண்ணங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஓடி நெளிகையில் அவருக்கு வாய்விட்டு அழவேண்டும்போல இருந்தது.

அப்போது மழைக்காலம். அவர் தங்கை பிரசவ வேதனையில் இருக்கிறாள். இரட்டிலே அரிக்கன் லாந்தரைக் கையில் எடுத்துக்

### பாசம்

கொண்டு கந்தையா மருத்துவிச்சியைக் கூப்பிட ஓடுகிறார். ஓடும்போது தெருவிலே கிளம்பியிருந்த கல் பெருவிரலிற் தாக்க அதிலிருந்து இரத்தம் கசிகிறது. அதையும் பொருட்படுத்தாமற் பறந்து சென்றவர் மருத்துவிச்சியை அழைத்து வந்ததும், உடனே திருமபி என்னென்னவோ கடைச் சரக்கு எல்லாம் வாங்க ஓடுகிறார்.

வெளி விறாந்தையில் என்ன ஆகுமோ என்று ஏங்கிக்கொண்டிருக்கையில் அறைக்குள்ளே குழந்தை குவா குவா என்று வீரிட்டலறுகிறது. 'ஆண்பிள்ளை, ஆண்பிள்ளை' என்று மகிழ்ச்சி மிகுதியில் அந்த வீடே அலறுகிறது. அர்த்த இராத்திரியில் எல்லாரும் கந்தையாவிடம் உனக்கு மருமகன் பிறந்திருக்கிறான், மருமகன் பிறந்திருக்கிறான் என்று புன் சிரிப்போடு சொல்லுகையில் அவருக்குத்தான எத்தனை மகிழ்ச்சி! எத்தனை பெருமிதம்!

கைக்குழந்தையாயிருக்கும்போது நடராஜன் செக்கச் செவேரென்று அழகாக இருப்பான். அவனைத் தூக்கி வைத்துக்கொண்டிருப்பதே கந்தையாவுக்கு முழுநேர வேலையாக இருக்கும். அதுவும் அவனைப் பிறந்த மேனியோடேயே வைத்துக்கொண்டால்...... அத்தனை அழகானவன் தான் நடராஜன்.

கந்தையாவிற்குக் கலியாணமானபோது நடராஜனுக்கு மூன்று வயதுதானிருக்கும். அவனையொத்த பிள்ளைகள் எல்லாருமே முகூர்த்த நேரத்தில் நித்திரையாய் விட்டார்கள். ஆனால் நடராஜன் மட்டும் முகூர்த்த நேரத்திற்கூடத் தன் மாமனாரின் பக்கத்தில் மணையிற் தானிருந்தான். தாலி கட்டும் வேளையில் அவனை, அவன் தாய் பொன்னம்மா வலிந்துத் தூக்கிக்கொண்டு போனபோது அவன் அழுத அழுகை.......

அடுத்த வருடம் அவனுக்கு அவராகவே வித்தியாரம்பம் பண்ணி வைத்தார். கம்பனின் 'வெள்ளைக் கலையுடுத்து' என்ற வெண்பாவை ஒருதடவை சொல்லிக் கொடுத்துவிட்டு அன்று ஊர் முழுவதற்குமே ஒரு விருந்து நடத்தினார் கந்தையா.

அதன்பிறகுதான் என்ன? எப்போதாவது அவன் தந்தையார் அவனைச் சிறிது கடிந்து கொண்டாலும் அவன் மாமனார் வீடே கதி என்று பழி கிடந்து விடுவான். அதன்பிறகு தன் தோளில் ஏறிக்கொண்டுதான் அவன் வீட்டுக்குப் போகவேண்டும்.

காலப் புழுதியில் மக்கி மடிந்துவிட்ட சம்பவங்கள் எல்லாம் எண்ணப் புழுதியைத் தட்டிவிட்டுக்கொண்டு பளிங்காறு போலத் தெளிவாக ஓடிக்கொண்டு வருகையில் கந்தையா, தன் மைத்துனனின் அகம்பாவத்தை வெறுத்தார்; தன் முன்னால் அழுதுகொண்டு நிற்கும் தன் மகள் கனகத்தை வெறுத்தார். "ஏனப்பா! நீங்கள் அப்படிச் சொன்னீர்கள்?' என்று ஆத்திரமாகவும் பயத்தோடும் பதட்டத்தோடும் கேட்டுக் கொண்டுநிற்கும் தன்மகளை வெறுத்தார். இச்சம்பவங்களை எல்லாம் கண்டும் காணாதவளைப்போன்று அடுக்களைக்குள் அமைதியாக இருக்கும் தன் மனைவியை வெறுத்தார். நான் ஏன் நடராஜனிடம் இபபடிச் சொன்னேன் என்றெண்ணிய போது தன்னையே வெறுத்தார். அவரே அவரை வெ

(தொடர்ச்சி 10ஆம் பக்கம் பார்க்க)


## 'சாமுவேல்'லைக் கலந்தாலோசியுங்கள்

- ❊ நீரிறைக்கும் குழாய்கள் நிறுவுவதற்கு
- ❊ குழாய்நீர் வசதியமைத்தற்கு
- ❊ நீர் வடிகால்கள் உதவி அமைத்துக் கொடுப்பதற்கு
- ❊ சகல விதமான திருத்தங்கள் செய்து புதுப்பிப்பதற்கு.

மனுச்செய்வோருக்கு, விலைத் தரிப்புகள் இனாமாக வழங்கப்படும்.

சாமுவேல், சன்ஸ் அன்ட் கோ லிமிடெட்
ஆஸ்பத்திரி ரோட்டு, :: யாழ்ப்பாணம்

தலைமைக் காரியாலயம்:
371, பழைய சோனகதெரு,
கொழும்பு.

பேசுந்தந்தி: 62
தந்தி: ECHIRON

[A197-iv]



## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918ஆம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 இலட்சம் ரூபா
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப் பணம் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு 100 ரூபா திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சமிதிசராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[A169]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழுகொம்பு

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கையில் அவரால் வெறுக்கப்படாதது ஒன்றுமே இல்லாமல் இருந்தது.

உலகையே வெறுத்துக் கொண்டிருந்த அவர், இன்னமும் தன்முன்னுல் கனகம் அழுதுகொண்டே நின்றபோது, "எல்லாம் உன்னுற்தான் வந்தது; போ உள்ளே" என்று கனகத்தின்மேற் சீறினர். மேலும் நின்றுல் அனர்த்தந்தான் என்று அவன் எண்ணிக்கொண்டே அறைக்குட் சென்று தலையணைகட்குள் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்!

அப்போதுதான் உயர் திரு சண்முகம் அவர்களும் மெதுவாகச் செருமிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்து தன் தெத்துப் பற்கள் வெளியே துலாம்பரமாகத் தெரியும்படியாகச் சிரித்தார். அவர் சிரிப்பதைக் கண்ட கந்தையா, "நீர் எங்கே வந்திர்?" என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

"ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரிக்க முயன்றுர்சண்முகம்.

"உங்களைப் போன்றவர்கள் இருக்கும்வரை இந்த ஊரே சமாதானமாயிராது. உங்களுக்கு இங்கே ஒரு அலுவலுமில்லை; போய்விடும்" என்று சண்முகத்தின்மேல் எரிந்து விழுந்தான் செல்லன்.

சண்முகம் நல்ல புத்திசாலி. தருணமறிந்து விலகிவிட வேண்டும் என்பது அவருக்கு அனுபவ ஞானத்திற் தெரியும். எனவே அவர் "சரி தம்பி" என்று சிரித்துக்கொண்டே அவ்விடத்தை விட்டுப் போகையில், மனதுக்குள்ளே "இந்தப் பயலுக்குச் சரியான பாடம் படிப்பிக்காவிட்டால் நான் சண்முகமல்ல" என்றுசொல்லிக்கொண்டார்!

தான் சொல்லவேண்டியதைச் செல்லன் சொல்லிவிட்டான் என்றெண்ணினுரோ அல்லது அவரால் ஒன்றும் பேசவே முடியவில்லையோ, என்னவோ கந்தையா பிடித்து வைத்த சிலைபோல அப்படியேதான் இருந்தார்.

செல்வராஜனுக்கு உடனே சென்று நடராஜனைப் பார்க்கவேண்டும் என்று தோன்றிற்று. மேலும் தன் தந்தையின் கலங்கிய கண்களைப் பார்த்துக்கொண்டு நிற்கவும் அவனுல் முடியவில்லை அப்படியே நிற்பதால் ஏதும் பயன் வரும் என்றும் அவனுக்கு நம்பிக்கையில்லை. எனவே அவன் திடீரென்று தெருவிலிறங்கி நடந்தான்.

நடராஜனின்வீட்டைநோக்கி வேகமாக வந்தபோது தெருவில் நடராஜன் கொழும்புக்குப் புறப்பட்டுப் போய்விட்டதாகக் கேள்விப்பட்டான்.

வேஷ்டியைச் சண்டிக்கட்டுக் கட்டிக்கொண்டு ஓட்டம்ஓட்டமாகத் துறைமுகத்துக்கு வந்து பார்த்தபோது நடராஜன் திருகோணமலைக்குப் புறப்பட்டுப் போய்விட்டது தெரியவந்தது. செல்லன் என்ன செய்வது என்று அறியாமல் யோசித்துக்கொண்டு நின்றுன். —தொடரும்

## உலக மகாகவி

### ஏருவூரிற் பாரதி விழா

ஏருவூர் கனிஷ்ட பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. எஸ். தம்பிராசா அவர்கள் தலைமையில் 18-9-55 இல் இளங்கோ மூத்தமிழ் மன்றத்தினரால் பாரதி நினைவுவிழாக் கொண்டாடப்பட்டது. பாரதி ஓர் உயர்ந்த கவிஞன், உலகக் கவிஞன், விரிந்த சிந்தனையுள்ளவன், பரந்த மனப்பான்மை உள்ளவன், சிறந்த சீர்திருத்தவாதி, தேசப்பற்றும் இனப்பற்றும் மிக்கவன். சாதிப் பாகுபாட்டின் விரோதி, புதுமைப் பெண்ணுலகின் விடிவெள்ளி, பெண்கள் சமுதாயத்தின் உயர்ச்சிக்காகப் பல எழுச்சிக் கவிகளைப் பாடியவன். பாரதி பெண்கள் சமூகத்தை ஏற்றிப் போற்றிய அளவுக்குத் தமிழகத்தில் வேறு யாரும் செய்யவில்லை. இவ்வாறு ஜனுப் யூ. எல். தாவூத் பேசுகையிற் குறிப்பிட்டார். திருவாளர்களான பண்டிதர் ச. தம்பிராசா, எஸ். கே. சுந்தரம், பண்டிதர் வே. சாமித்தம்பி, எம். லோறன்ஸ் அற்புதராஜா முதலியோரும் பேசினர்.

# நமது வாசிகசாலை

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிற்கும் உணவூட்டுகிறுர். நல்ல வசனங்களுக்கோ இந்நூலிற் பஞ்சமேயில்லை. கருத்து நிறைந்த பல வசனங்கள் இந்நூலிற் காணப்படுகின்றன. 'குணமாலை மணமாலை பேசுகின்றுள். நங்கைக்கு நம்பியும் நம்பிக்கு நங்கையும் ஒத்திசைந்தால் நாமினிப் புகல்வதென்ன? பாவுஞ் சுவையும்போற் பல்லாண்டு பொருந்தி வாழ்வாராக'. நம் மனத்தில் வேருடன் பதிந்துவிடும் இயல்புடைய பல வசனங்கள் இந்நூற்கணுள. நாரதர் கூறுகிறுர்: 'விதர்ப்ப நாட்டரசன் வீமன் மகளுக்குச் சுயம்வர நிகழ இருக்கின்றது. அதுதான் மண்ணுலகப் புதினம். விதர்ப்ப நாட்டின் புகழ் மணம் அமராவதியிலுங் கமழ்கின்றது. அதுதான் விண்ணுலகப் புதினம்' 'அஞ்சுகமே நீ என்னை நாளும் வஞ்சிக்கின்றுய்'

ஆசிரியர் இடமும் பொருத்தமும் அறிந்து சிற்சில பழைய பாடல்களை இடையே எடுத்தாளுதல் சுவையுடைத்து. நளன் இல்லறம் மேற்கொள்ளும் எண்ணமேற்பட,

"மண்ணினல்ல வண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கு
யாதுமோர் குறைவிலை
.................. ..............
பெண்ணினல் லாளொடும்
பெருந்தகை யிருந்ததே"

எனக் கூறுவதிலிருந்து மேற்காட்டிய உவமையை அறியலாம். பாடல் அடிகளுக்கு இடையிடையே ஆசிரியர் காட்டும் நயவுரை போற்றற்குரியது, பக்கம் 33, 34, 50, 56, 63 அடிக்குறிப்புக்களில் இதனை நன்கறியலாம். போகியாகிய இந்திரனை இவ்வாசிரியர் இந்நூலில் மிகப் பெரிய பக்தனுய்க் காட்டுவது ஏனே? தமிழில் இலக்கண வரம்பினைக் கல்வி எடுத்தற்கு வேனில் விழா எடுத்தல் பற்றி ஆசிரியர் குறிப்பிட்டிருக்கத்தேவையில்லை. திலோத்தமை என்ற சொல்லுக்கு அன்னம் வியாக்கியானமகொடுக்குமளவிற்கு, உயர் பண்பும் அறிவும் படைத்த நளன் திடீரென அறிவற்றவனுகி விட்டானு? ஒருவேளை அன்னத்துடன் நளன் கதைக்கும் விழைவால் இப்படிக் கூறுகின்றுனு?

மேல்வகுப்பு மாணவர் படித்து இன்புறவும் நளவெண்பா, நைடதம்போன்ற நூல்களுக்கு மாணவரை வழி நடாத்தவும் இந்நூல் வழி காட்டுகிறது. நல்ல வசன இலக்கியங்கள் தேவைப்படும் இக்காலத்தில் இந்நூல் வெளிவந்திருப்பது மாணவருக்குப் பல்லாற்றுனும் நலம் செய்வதாயிருக்கிறது.

—போ. கி.

●

கந்தர் கலிவெண்பா—(உரையுடன்) உரையாசிரியர்; வழக்கறிஞர் சைவப் புலவர், பண்டிதர் நா. ஏகாம்பரம் அவர்கள்; வெளியீடு: இராசகுமாரன் அச்சகம், யாழ்ப்பாணம்.

குமரகுருபர சுவாமிகள் இயற்றிய கந்தர் கலிவெண்பா சைவ மெய்யன்பர்களால் நாடோறும் பாராயணம் செய்யப்பட வேண்டிய நூல்களில் ஒன்றுகும். எனினும் சில பதிப்புகள் வாசிப்போர் இடருறும் வண்ணமும் சில மலிவுப் பிரசுரமென்ற போர்வையில் வாசிக்க முடியாத அச்சுகளைக்கொண்டும் வெளிவந்திருக்கின்றன. இவை மாத்திரமன்றிப் பொருள் அறியாமல் ஒரு நூலைப் பாராயணம் பண்ணுவதும் எளிதானதன்று. இதை உணர்ந்து பண்டித நா. ஏகாம்பரம் அவர்கள் இந்நூலை அழகிதாக வெளிக்கொணர்ந்தமை போற்றுதற்குரியது. குமரகுருபர சுவாமிகளின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதியிருப்பதும், பாடல் முழுவதையும் சந்திபிரியாது சீர் பிரித்து முதற்கண் அச்சிட்டிருப்பதும், பின்பு சிவபெருமானின் சொரூப இலக்கணம். சிவபெருமானே தனிப் பரம்பொருள் எனத் தலையங்கமிட்டுப் பகுதி பகுயாகப் பதப்பொருள், கருத்துரை. விசேடவுரை என எழுதியிருப்பதும் படிப்பவர்களுக்கு இலகுவானதென்பதில் ஐயமில்லை. ஆசிரியர் கூறும் விசேட வுரையால் அவரின் சைவ சாஸ்திரப் பயிற்சியை நாம் அறிய முடிகிறது. ஈழமணித் திருநாட்டின் ஒப்புயர்வற்ற புலவர் பெருமானுகிய நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் அவர்கட்கு ஏற்ற மாணுக்கன் தான் என்பதை ஏகாம்பரம் இந்நூல் மூலம் நிரூபித்திருக்கிறுர். சைவ உலகம் இதை உவந்தேற்குமென எண்ணுகிறேன். —வேல்

●

தேன்மொழி: மாதம் ஒருமுறை மலரும் கவிதை இதழ். ஆசிரியர்கள்: தி. ச. வரதராசன், மஹாகவி; ஆண்டுச் சந்தா: ரூ. 3. விலாசம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

வெண்பா

கற்கண்டோ பாகோ
கனிரசமோ என்றெண்ணும்
சொற்கொண் 'டிலங்கைவளம்'
சொல்புலவன்—நற்பெயரால்
மாதம்மா தம்உலவ
வந்திருக்கும் 'தேன்மொழி'யை
ஆதரிப்ப தெங்கடனே யாம்.

நல்ல முருகையன்
'புத்தொளி பாய்ச்சி'ட
நாவும் இனிக்கச்
சுவைபிறக்க
வல்ல 'துயிலெழுச்
சிக்கவி' சாரதா
வார்த்துக் கொடுக்க
மனம் மகிழ்ந்தோம்
'பல்லி'யும் 'காதலு'ம்
'பார்வை'யும் 'சித்த'னும்
பாடும் 'நதி'யும்
மிகநன்றே
நல்லியற் றேன்மொழி
நாடொறும் புத்தொளி
நாட்டுவ ளென்பதும்
நிச்சயமே.

## நாவலர் நினைவுப் போட்டி

வருடந்தோறும் விவேகானந்த சபையார் நடாத்தும் நாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டி 6.11.55ல் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் நடைபெறும். பேச்சு வன்மைப் போட்டியிற் பூர்வாங்க தேர்தல்கள் பல் வேறு ஊர்களில் நவம்பர் மாதத்திலும், இறுதித் தேர்தல் கொழும்பில் நாவலர் குருபூசைத தினத்தை அடுத்தும் நடைபெறும். பேச்சு வன்மைப் போட்டியில் அகில இலங்கையிலும் முதலிடம் பெறுபவருக்குத் தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படும். விண்ணப்பங்கள் 10. 10. 55க்கு முன் அனுப்பப்பட வேண்டுமெனச் சபையார் தெருவிக்கின்றனர்.

## டுனீசிய அரசு

புதிய சுயாட்சி ஒப்பந்தத்தின்கீழ் முதலாவது டுனீசிய அரசாங்கம் 17-9-55இல் பதவி ஏற்றுள்ளது. 1881இல் பிரெஞ்சு ஆதிக்கம் இங்கு ஆரம்பமானபின் முற்றிலும் டுனீசியரைக்கொண்டு நிறுவப்பட்ட முதலாவது அரசாங்கம் இதுவேயாகும். தஹார்பென்அமார் முதலமைச்சர் பதவியை வகிக்கிறுர்.


# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 913 Testy

புத்தூர்
சிற்றம்பலம் சுப்பிரமணியம்
பெண் காலம்சென்ற பரா
சத்தியின் ஆஸ்தியின் பேரில்
புத்தூர்
சிற்றம்பலம் சுப்பிரமணியம்
தத்துவகாரன்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 913ஆம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் பன்னிரண்டு துண்டுக் காணிகள், 1955ஆம் ஆண்டு ஒக்டோபர் (ஐப்பசி) மாதம் 15ஆந் திகதி 15-10-55) சனிக்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்க் கோவிற்பற்று சிறுப்பிட்டி இறை "சோறுவலை" நிலைப்பரப்பு 92 குளி 10. எல்லை: கிழக்கு, வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு, பாறுவதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்: மேற்கு, வயிரமுத்துவுக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம. தெற்கு, பூதருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் $\frac{1}{8}$ பங்கு.

2. மேற்படி சிறுப்பிட்டி இறை "வல்வத்தையும் மறுபிரிவுகளும்" நிலைப்பரப்பு 12. எல்லை: கிழக்கு, கார்த்திகேசு கனகசபைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு, இளையதம்பி பெண் சின்னச்சிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு, கார்த்திகேசு கயிலாயரின் ஆதனம். தெற்கு, இளையதம்பி பெண் அபிராமிப்பிள்ளையின் ஆதனம். இதடங்கலும்

3. மேற்படி புத்தூர் தெற்கிறை "சாடையடி" நிலைப் பரப்பு 5½. எல்லை: கிழக்கு, சின்னப்பிள்ளையும் மறுபேரும். வடக்கு, ஒழுங்கை. மேற்கு, விசாலாட்சியின் ஆதனம். தெற்கு, பொன்னுச்சியின் ஆதனம். இதில் சொரியலாய் நிலைப்பரப்பு $3\frac{3}{4}$உம் அதற்குரியவைகளும்.

4. மட்டுவில் வடக்கிறை "நாட்டகமட்டான்வளம்" மறுபிரிவுகளும். நிலைப்பரப்பு $27\frac{1}{2}$உம் மற்றும் பயிர்களும். எல்லை: கிழக்கு, உலகநாதர் சதாசிவத்தின் ஆதனம். வடக்கும், மேற்கும் றேட்டு. தெற்கு, விநாசித்தம்பி கந்தவனத்தின் ஆதனம். இதடங்கலும்.

5. மேற்படி புத்தூர் இறை "இறந்தனை" நிலைப்பரப்பு 59. எல்லை: கிழக்கு, ஒழுங்கை. வடக்கு, கதிரிக்கும் பிச்சையன் வேலனுக்கும், மறுபேருக்கு முரிய ஆதனம். மேற்கு, ஒழுங்கையும் மறுபேருக்குமுரிய ஆதனமும். தெற்கு, தாமோதரர் சுப்பிரமணியத்திற்கும் புதநாச்சனுக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி.

6. மேற்படி சிறுப்பிட்டி இறை "கோட்டைக்காடும் மறுபிரிவுகளும்" நிலைப்பரப்பு 30. எல்லை: கிழக்கு, முருகர் சேனாதிராயரின் ஆதனம். வடக்கு, ஒழுங்கை. மேற்கு, கார்த்திகேசர் நல்லதம்பியின் ஆதனம். தெற்கு, பூதராயர்கோவில் ஆதனம். இதடங்கலும்.

7. மேற்படி புத்தூர் தெற்கிறை "பெரியபுலம்" நிலைப் பரப்பு 8. எல்லை: கிழக்கு, சங்கரி விநாசித்தம்பிக்குரிய ஆதனம். வடக்கு, கதிர்காமனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு, நாகநாதர் பெண் காசிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு, நாகலிங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இதில் சொரியலாய் அரைவாசி.

8. மேற்படி சிறுப்பிட்டி இறை "இளைனிவித்திலுவில" நிலைப்பரப்பு 18. எல்லை: கிழக்கு, சண்முகம் இளையதம்பியின் ஆதனம். வடக்கு, சுப்பர் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு, சின்னத்தம்பி வல்லிபுரத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு, நன்னித்தம்பி கார்த்திகேசுவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

9. மேற்படி அச்சுவேலி, தெற்கிறை "குப்பாபுலம்" நிலைப் பரப்பு 100. எல்லை: கிழக்கு, முடிக்குரிய ஆதனம். வடக்கும் தெற்கும் ஒழுங்கை. மேற்கு ஆறுமுகத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

10. மேற்படி புத்தூர் வடக்கிறை "பாலைக்குளம்" நிலைப் பரப்பு 10. எல்லை: கிழக்கு, முருகர் நாகமுத்தருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, தாவைக்காணி. மேற்கு, காசியர் இராமநாதரின் ஆதனம். தெற்கு, மயில்வாகனத்தின் ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி.

11. மேற்படி புத்தூர் தெற்கிறை "வாழைச்சிசீமா" நிலைப் பரப்பு 7. எல்லை: கிழக்கு, பின்னைபிள்ளர் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு, குமாரசுவாமி கைம்பெண் சின்னத்தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு, என். சந்தையாவின் உரிமைக்காருக்குரிய ஆதனம். தெற்கு, பொன்னையா பெண் மாரிமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் $\frac{3}{8}$ பங்கு.

12. மேற்படி அச்சுவேலி தெற்கிறை "சீமனத்தி" எல்லையும் மறுபிரிவுகளும். நிலைப் பரப்பு 24. எல்லை: கிழக்கு, பச்சிமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் ஒழுங்கையும். வடக்கு, சபாபதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கும் தெற்கும் சுப்பிரமணியம் மயில்வாகனத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி கந்தப்பிள்ளை
Commissioner & Licensed
Auctioneer

தெல்லிப்பழை,
12-9-1955 [A210]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




அருமையான மருமக்களே!

அநேக மருமக்கள் அடிக்கடி நல்ல விஷயங்களை எழுதிப் பாலர் பகுதியை அழகுபடுத்தி வருகின்றார்கள். பாலர் பகுதியில் மருமக்களின் விஷயங்கள்தான் இடம்பெறுகின்றன. இதைக்கண்டு மிகுதியும் புதிய மருமக்கள் அநேகர் சேர்வது மட்டுமல்லாமல் நல்ல விஷயங்களையும் அனுப்பி வருகின்றார்கள். அவர்களின்விஷயங்களைக் கூடியமட்டில் இங்கு திருத்தி வெளியிட முயல்வேன்.

மருமக்களில் அநேகர் கதையெழுதுவதிற்றான் போதிய சிரத்தைகாட்டி வருகிறார்கள். அது வரவேற்பதற்குரியதே. ஆனால் நல்லகட்டுரைகளையே பிழையின்றி எழுதப் பழகவேண்டும். பெரியார்களின் வாழ்க்கை வர்ணனைகள், இயற்கைக் காட்சிகள் பற்றிய கட்டுரைகள் வரவேற்பதற்குரியன. ஆகவே, மருமக்கள் இவ் விஷயங்களில் மிகுந்த சிரத்தை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கேசரி மாமா

## சிலந்திப் பூச்சி

அ. அ. மஹ்மூது (1298)

இறைவன் படைப்பின் மேன்மையை ஒவ்வோர் உயிர் வகையிலும் நாம் கண்ணுரக்காண்கிறோம். விலங்குகள் பல அற்புதமான தொழில்களைச் செய்கின்றன. பறவைகள் பலவகையான கூடுகளைக் கட்டுகின்றன. எறும்புகளும், தேனீக்களும் சுறுசுறுப்புடன் வேலைசெய்து நம்மை வியப்புக் கடலில் ஆழ்த்துகின்றன. உயிர்வகைகளில் சில கூட்டமாயும், மற்றும் சில தனித்திருந்தும் தொழில்கள புரிகின்றன. எறும்பு, தேனீ என்பன தனித்து ஒன்றும் செய்யமுடியாது; செய்யின் நிறைவேருது. ஆனால் சிலந்திப் பூச்சி தனித்துத் தொழில் புரிகிறது. அது இயற்கையில் போர் புரியவும் வல்லது. அது தன் இனத்தோடும் மற்ற இனத்துப் பூச்சிகளோடும் எப்போதும் போர் செய்து கொண்டேயிருக்கும். அதன் உடலமைப்பும், அதற்கேற்ப அமைந்துள்ளது. அதன் தலையும், மார்பும் மற்றப் பூச்சிகளால் தாக்க இயலாதபடி அமைந்துள்ளன

அதன் வயிறு, குளவிபோன்ற பூச்சிகளால் தாக்க முடியாதபடி, இறப்பரைப் போன்ற மெல்லிய தோலால் மூடப்பட்டிருக்கும். அதன் கால்களின் நுனியில் வலிய நகங்கள் அமைந்துள்ளன. அது ஈட்டிபோல் நீண்டிருப் பதால் தன் விரோதிகளைத் தாக்கித் தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது. சிலந்தியின் கண்கள் பெரியதாய் இருந்தாலும் பளபளப்புள்ளன. சிலந்தியின் வாயின் மேற் புறத்தில் குறடு போன்ற ஒரு கருவி உண்டு. அக் கருவியினுலேதான் தன்வலையில் அகப்பட்டவைகளை அது கொல்கின்றது.

சிலந்தியின் வலை அதன் எதிரிகளை அகப்படச்செய்யும்முறையில் அமைக்கப்படுகின்றது. அதன் உடலில் ஒருவகைப் பசை உண்டு. அது அப்பசையைத் தன் மல வாயில்மூலமாய் வெளியே கொண்டுவந்து, மெல்லிய நூல் போன்று. திரித்து வலைகளைப் பின்னுகிறது. வலைகளைப் பின்ன ஏறக்குறைய மூன்று நாட்களாகும். வலையைப் பின்னிய பின்பு அது உறுதியாய் அமைந்துள்ளதா என்பதை அறிந்தபிறகுதான் வலையின் நடுவிலுள்ள துவாரமொன்றில் அது வசிக்கிறது.

## தங்கமான உள்ளம்

இ. சந்திரராசா (1292)

தலைமை ஆசிரியர் "மூன்று நாட்களுக்குள் சம்பளப் பணத்தைக் கட்டாதவர்கள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்" எனச் சொல்லிவிட்டுச் சென்றார். இதைக் கேட்டவுடன் மாணவர்களிற் சிலர் அதிர்ச்சி யடைந்தார்கள். அவர்களில் தங்கராசாவும் ஒருவன்.

தங்கராசா மிகவும் வறுமையான குடும்பத்திற் பிறந்தவன். எந்தக் கஷ்டத்திலும் அவனைப் படிக்க வைக்கவேண்டும் என்பதே அவன் பெற்றோர்களின் எண்ணம்.

அவன் இம்முறை சோதனையில் சித்தியடைந்தபின் உத்தியோகம் பார்ப்பானென ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள் பெற்றோர்கள். தங்கராசா உத்தியோகம் பார்த்தால் தங்கள் துன்பமெல்லாம நீங்கிவிடும் என்ற தணியாத ஆசையில் அமிழ்ந்திருந்தனர்.

தங்கராசா வீட்டிற்கு வந்து சம்பளம் கட்டாவிட்டால் பரீட்சை எடுக்க முடியாதென்பதைத் தெரிவித்தான். இதைக்கேட்ட அவர்கள் திகைத்தார்கள். அவர்களின் கையிலோ பணமில்லை, ஆனால் அதைத் தெரிவிக்காது அமைதியாகப் பணம் சேர்க்கும் வழியைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் தங்கராசனின் தந்தை, யாரும் அறிந்தவர்களிடம் கடன் கேட்கலாம் என்ற எண்ணத்துடன் வெளியே சென்றார். தனக்குத் தெரிந்தவர்களிடம் கெஞ்சிக்கேட்டு இருபது ரூபாய் சேர்த்து வந்தார்.

தங்கராசா பணத்தைப் பெற்றுக்கொண்டு பாடசாலையை நோக்கிச் சென்றான். வழியில் ஓர் இடத்தில் சனங்கள் கூட்டம் காணப்பட்டது. அவனும் கூட்டத்துள் நுழைந்து என்ன நடக்கிறது என்று பார்த்தான். அங்கு ஒரு பெண் "ஐயா, சாமி, பத்து ரூபாய் கொடுத்து ஊசி போடாவிட்டால் என் குழந்தை இறந்துவிடுவான். ஏதேனும் உதவி செய்யுங்கள்" என்று தன் ஈனக் குரலில் கெஞ்சிக்கொண்டிருந்தாள். அவள் கையில் துணியால் போர்க்கப்பட்டிருந்த குழந்தையொன்றிருந்தது

இதைக் கண்ட தங்கராசாவின் மனம் துன்பப்பட்டது. அந்தக் குழந்தையின் மேல் இரக்கம் பிறந்தது. தன்னிடமிருக்கும் பணத்தைக் கொடுத்தால் என்ன என்று எண்ணினான். 'பரீட்சை எடுப்பதா? அல்லது குழந்தையைக் காப்பாற்றுவதா?" என்று அவன்மனம் போராடியது. முடிவில் குழந்தையைக் காப்பாற்றுவது என்று தீர்மானித்தது. அவனது பணத்திற் பத்து ரூபாய் அப் பெண்ணின் கைக்கு மாறியது. அப்பெண் அவனை வாழ்த்திவிட்டு வைத்தியசாலைக்குக் குழந்தையுடன் ஓடினாள். எல்லோரும் தங்கராசாவை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

அதேசமயத்தில் அவ்வழியாற் சென்ற தலைமை ஆசிரியர் எப்படியோ அங்கு நடந்த எல்லா விஷயங்களையும் அறிந்து தங்கராசாவின் கனிந்த உள்ளத்தைப் பாராட்டித் தட்டிக் கொடுத்து, அவன் மீதிப் பணத்தைத் தானே கொடுத்துச் சோதனையிற் பங்கு பற்றச் செய்தார்.

## புதிய மருமக்கள்

பவுல் நவாரஸ் பெர்னுண்டோ (காந்தன்) (1310)
அர்ச். சூசையப்பர் பாடசாலை, திருகோணமலை.

செல்வி ராஜம் (1311)
41ஆம் இலக்கம் பேக்கரி ரோட், திருகோணமலை.

ஜனகன் ஸ்ரீகந்தா (1312)
ஓல்ட் பாக், யாழ்ப்பாணம்.

மு. அ. மு. பாரூக் (1313)
20, திருகோணமலை வீதி, மாத்தளை.

## கவனிக்கவும்

ஈழகேசரி பாலர் பகுதியில் 6 வயதுக்கு மேற்பட்டவர்களாயும், 1? வயதுக் குட்பட்டவர்களாயும் உள்ள சகலரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் இங்கு வெளியாகியுள்ள விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டும்

## மாமா மறுமொழி

அ. அ. மஹ்மூது (1298)
உமது விஷயங்கள் மூன்றும் கிடைத்தன. இம்முறை அவற்றில் ஒன்று பிரசுரமாகியுளது. உமது ஆர்வம் மேன்மேலும் வளர்க.

இ. சந்திரராசா (1292)
உமது விஷயத்தின் தலையங்கம் மாற்றப்பட்டுள்ளது.

எம. நவரத்தினம்
மருமகனே! பாலர் பகுதியில் தொடர்கதை வெளியிடுவதற்கில்லை. உமது முயற்சியைப் பாராட்டுகிறேன்.

## திருந்திய மைந்தன்

இந்திராணி தர்மலிங்கம் (1285)

மனோகர் பெற்றோருக்குச் செலலப்பிள்ளை. பெற்றோர்கள் மகனைக் கண்டிக்காது அதிக இடம் கொடுத்தனர். அவன தீயவர்களோடு சேர்ந்துகொண்டான். பன்றியோடு சேர்ந்த கன்றுபோலானான். இதையறிந்த அவனது தந்தையின் உள்ளம் கொந்தளிக்கும் கடல்போலானது. தான் செல்லம் கொடுத்ததினாற்றான் இப்படிப் போனான் என்று உணர்ந்தார். மகனுக்குப் புத்திமதிகளைக் கூறியும் பயனில்லை. அவன் குணம் தீய வழியிலேயே சென்றது. அவனைத் தந்தையார் வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டார். அவன் தனது நண்பர்களுடன் கூடிக்கொண்டான். அவர்களும் மனோகரிடம் பணம் இருக்கும்வரை சேர்ந்தார்கள். பணம் செலவான பின் அவனிடமிருந்து நழுவி விட்டனர். அப்பொழுதுதான் தந்தையின் புத்திமதிகளை எண்ணிப் பார்த்தான்; சிந்தித்தான்; தனது தவறை உணர்ந்தான். தந்தையிடம் போய்க் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினான். மைந்தன் திருந்தியதையறிந்த தந்தை களிகொண்டார். மனோகரனை மன்னித்தார். இப்பொழுது நல்லவர்களோடு நட்புக கொண்டுளான். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்று அவன் கேட்டவர்களுக்கு நற்புத்தி புகட்டுகிறான்.

மட்டக்களப்பில்
ஈழகேசரி
கிடைக்குமிடம்:
கலாநிதி புத்தகசாலை,
30, பெரிய தெரு,
மட்டக்களப்பு

## மாரி வந்தாள்

— ஈழு —

மாரி மகிழ்ந்தோடி வந்தாளடி—இந்த
மண்ணக மேசெழித் தோங்கவென்று
ஏரி குளங்கள் நிரப்பிவந்தாள்—எங்கும்
இன்பப் புனலைப் பரப்பிவந்தாள்.

கார்முகில் வந்து கவிந்திடவே—இருள்
கன்னங் கரேலெனச் சூழ்ந்திடவே
பாரின் பசியை அகற்றவந்தாள்—இந்தப்
பாரிற் பசுமையுண் டாக்கவந்தாள்.

காடு கரம்பையாற் பாயுதடி—பெரும்
காட்டாற்றில் ஓடி வழியுதடி
நாடு நகரம் பொலியுதடி—உள்
நாட்டுப் பொருளும் மலியுதடி.

காய்ந்து கிடந்த தரையினிலே—பயிர்
காட்சி அளிக்குது பாருமடி
ஓய்ந்து கிடந்த குடிசையிலே—பண்ணின்
ஓசை எழும்புது கேளுமடி.

### விண்ணப்பப் பத்திரம்

ஈழகேசரி — பாலர் பகுதி

கேசரி மாமா, ஈழகேசரி, சுன்னுகம.

அன்புள்ள மாமா,

தயவுகூர்ந்து என்னை ஈழகேசரி—பாலர் பகுதியிற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்: ____________________

விலாசம்: ____________________

____________________

பிறந்த திகதி ____________________

____________________
தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிருந்தோர்

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுகிறேன். ஆனால் சேரன் பாண்டி நாட்டெல்லையிலே வடக்கிருந்து மாண்டான் என்ற பழிச்சொல்லுக்கு மட்டும் என்னை உட்படுத்தாதே" என்றான்.

"மகாராஜா! வெற்றிச் சங்கநாதம் முழங்கும் தங்கள் தலைநகரின் ஆடம்பரத்தில் மகிழ்ந்திருக்கவேண்டிய தாங்கள், கேவலம் தன்நாட்டு மக்களுக்கும் மூதாதையர்க்கும் அவமானத்தை உண்டாக்கிய கோழையைப் பார்ப்பதே அரச பரம்பரைக்கு இழுக்கல்லவா? தாங்கள் தயவுசெய்து சென்று விடுங்கள்! எந்த ஒரு மன்னன் தன் நாட்டுக்கு அவமானத்தையுண்டுபண்ணுகிறானோ அவனுடைய மரணம் இதைவிடக் கீழ் நிலையிலேயே யிருக்கும் என்பதை இன்றே நம் மக்கள் என்மூலமாக உணரட்டும்."

"மன்னா! உனக்கு அவமானத்தை யுண்டாக்கியவன் யார்? அதை எனக்குச் சொல்லிவிடு"

"மகாராஜா! எதிரியின் மரணத்தில் மகிழ்ச்சிகாண வேண்டியதுதானே அரச தர்மம். அதற்கு விலக்காக நடப்பது அதர்மமல்லவா?"

"உண்மைதான்! ஆனால் நீர் யுத்தகளத்தில் இறந்திருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஆனால்......"

"ஆம், மகாராஜா! நான் கோழையைப்போல் உயிருக்கஞ்சி ஓடிவந்து விட்டேனல்லவா?"

"மன்னா! ஏன், அப்படிச் சொல்லுகிறீர்? நாம இருவரும் தமிழர்களல்லவா? அன்றியும நீர் கோழையாய் இருந்திருந்தால் இத்தகைய மரணத்திற்குத் துணிவீரா? உண்மையைச் சொல்லும். நீர் எதற்காக வடக்கிருக்கின்றீர்"

"மகாராஜா! சத்துருவின் அழிவு தங்களுக்குப் பலமல்லவா? அதை மறந்து இங்கு வந்து வெற்றியைக் களித்து மகிழ வேண்டிய நேரத்தை வீணே கழிக்கலாமா? தயவு கூர்ந்து போய்விடுங்கள்."

"மன்னா! நீர் என் பகைவனல்லன். நீர் என் உடன் பிறந்தோன். கங்கையும் கடாரமும் தாண்டிப் பனிமலையிற் கொடி பதித்தஉன் முன்னோரின் படையெழுச்சிகளை தமிழரின் படையெடுப்பென்றே சரித்திர ஏடுகள் கூறுகின்றன. நாம் தமிழ் என்ற மணிமொழியால் பிணைக்கப்பட்ட சோதரர்கள் அல்லவா? சகோதரனுக்குச் சகோதரன் துன்பமிழைத்தால் அத்துன்பத்தைக் கூறுவதற்கு ஏன் தயக்கம்? சொல்லிவிடு. உன் தாள்மீது மண்டியிட்டுக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

"சொல்லுகின்றேன் அரசே சொல்லுகின்றேன். என் தாள்களை விடுங்கள். மின்னல் வேகத்தில் வந்த உங்கள் வீரனொருவனின் உயிரைக் குடிப்பதற்குத் தங்களுடன் போர் செய்துகொண்டு நின்ற நான் திரும்பினேன். அப்பொழுது தவறுதலாகத் தங்கள் வாள் என்முதுகிலே தாக்கிவிட்டது."

"யுத்த களத்திற் புறமுதுகு காட்டாத மக்கள்வாழும் எம் நாட்டில் கேவலம் முதுகிலே காயம்பட்டு என் மக்கள் முன்னிலையிற் போக என் மனம் இடந்தரவில்லை. என் சிந்தனை இந்த வழியைப் பின்பற்றத் தூண்டியது; வந்து விட்டேன்."

என்ன? என் வாள் உமது முதுகிற் தாக்கிவிட்டதா? மாற்றான் படையை நோக்கி மார் பேந்தும் தமிழ் மரபினனா நான்? இல்லை! நான்தான் கோழை! தவறுதலாக முதுகில் வாள் பாய்ச்சினேன் என்று சரித்திரம் கூறுதிருக்க நானும் உன்னுடன் சேர்ந்து வடக்கிருக்கின்றேன்" என்று சேரனின் பக்கலில் உட்கார்ந்தான்.

இரு வீரர்களும் வடக்கிருத்தலைக் காணச் சகியாத ஆதவன் தனது உருவத்தை முற்றாக மேற்கில் மறைத்துக் கொண்டான். வான விளிம்பில் அந்தகன் கோரப் பல்லைப் போல் வளர்பிறை தோன்றியது. அதன் ஒளியில் இரண்டு மன்னர்களையும் பார்த்துச் செயலற்று நின்றுகொண்டிருந்தான் மாறன்.

## ஏட்டுச் சுவடிகள்
### சேகரிக்கும் பணி

யாழ்ப்பாணம் மத்திய நூல் நிலையத்தின் நிர்வாகசபையின் சரித்திர, வைத்திய, சோதிட, விஞ்ஞான, கலை சம்பந்தமான சகல ஏட்டுச்சுவடிகளையும் சேகரிப்பதற்கெனச் சிறப்புக்குழு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளனர். கலைப்புலவர் க. நவரத்தினம், திரு. ச. அம்பிகைபாகன், திரு. எஸ். பாலசுப்பிரமணியம், (நகரசபைக் காரியதரிசி) திரு. கே. செல்லையா, முகாந்திரம் குலசபாநாதன், பண்டிதர் வி. சி. கந்தையா (மட்டக்களப்பு) ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

T'Phone No. 805


## சந்தா விபரம்

**ஆண்டுச் சந்தா:**

இலங்கை-இந்தியா ரூ.6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி ச. 10. காசு 10


## கோட்டு விற்பனவு விளம்பரம்
## இல. 11555.

தெல்லிப்பழை மேற்கு

1. அம்பலவாணர் முத்துக்குமாரு
2. பெண் ஆச்சியம்மா

வழக்காளிகள்.

வண்ணார்பண்ணை

1. சிவப்பிரகாசம் பாலசுப்பிரமணியம்

வண்ணார்பண்ணை

2. சிவப்பிரகாசம் சுவாமிநாதர் (மரணம்)

கொழும்பு றோயல் கல்லூரி

3. சிவப்பிரகாசம் சேதுகாவலர்

கொல்லங்கலட்டி

4. சிவப்பிரகாசம் சபாநாயகம்

கொழும்பு கிறன்ட்பாஸ்

5. சிவப்பிரகாசம் இளையதம்பி

கோப்பாய்

6. கதிரேசர் ஆறுமுகம்

கோப்பாய்

7. பெண் சரசாம்பாள்

கண்டி சென்ற்அந்தோனிஸ் கல்லூரி

8. அம்பலவாணர் இலங்கைநாயகம்

கண்டி சென்ற் அந்தோனிஸ் கல்லூரி

9. பெண் மகேஸ்வரி

வண்ணார்பண்ணை

10. எஸ். ரவேந்திரன், 11. எஸ். ரவேந்திரநாதன், 12. எஸ். சரோஜினிதேவி, 13. எஸ். மகேந்திரன். 10-13 எதிராளிகள் பராயமற்றவர்கள இவர்களின் பராமரிப்புக்காரி 4. சுவாமிநாதர் கைம்பெண் மகேஸ்வரி.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 11555ஆம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1955ஆம் ஆண்டு ஒக்டோபர் (ஐப்பசி) மாதம் 17ஆந் திகதி (17-10-55) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1971-25சதம். இதில் ரூபா 1000/க்கு 23-8-54 திகதி தொடக்கம் 12-5-55 திகதி வரைக்கும் 100/க்கு 9 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100/க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 523-23சதமும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று. தெல்லிப்பழை மேற்கிலை "கஞ்சிட்டி" நிலப்பரப்பு ஏழு (7உ்) எல்லை: கிழக்கு, சோமசுந்தரம் ஆறுமுகத்திற்கும் சகோதரங்களுக்குமுரிய ஆதனமும் தூர்வை நிலமும் மயில்வாகனம் விசுவநாதர் பெண் வள்ளிப்பிள்ளையின் ஆதனமும், வடக்கு, சோமசுந்தரம் ஆறுமுகத்திற்கும் சகோதரங்களுக்குமுரிய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு, மயில்வாகனம் விசுவநாதர் பெண் வள்ளிப்பிள்ளைக்கும் சோமசுந்தரம் ஆறுமுகத்திற்கும் சகோதரங்களுக்குமுரிய ஆதனங்கள். இதில் வடக்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர் கொண்டுபோகும் வாய்க்காலும் வழியும். மேலும் சோமசுந்தரம் ஆறுமுகத்திற்கும் பங்காளருக்குமுரிய கிழக்கெல்லைக் காணியிலிருந்து இக்காணிக்கு மேற்கேயிருக்கும் ஒழுங்கைக்குப் போக்குவரவுசெய்யும் வழமையான பாதை புறநீங்கலாகவும் மிகுதியில் சொரியலாய் அரைவாசியும் இன்னும் கிழக்கேயிருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழமையான வழிவாய்க்காலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை. 18-9-55 [A 208]


Registered at the G. P. O. as a Newspaper

26TH YEAR OF PUBLICATION

# EELAKESARI

NATIONALIST TAMIL WEEKLY

Largely Circulated in Ceylon, India, Burma, Federation of Malaya & Singapore

Founder: N. PONNIAH

| Vol. 26 | Chunnakam Sunday, Sept. 25, 1955 | No. 13 |
|---|---|---|



## இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
## THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.


(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கியிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ருபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ருபாவுக்குக் கூடியும் 10,000 ருபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ருபாவுக்குக் கூடியும் 50,000 ருபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ருபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 91, ஹோட்டன்பிளேஸ், கொழும்பு என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[A190]






### கொடுமையான களைப்பினால் பாதிக்கப்படுகிறீர்களா?

கொடுமையான களைப்பினால் பாதிக்கப்படுகிறீர்களா? தேக ஆரோக்கியத்திற்கும் வலிமைக்கும் அவசியமான, சமநிலையான போஷணை நம்முடைய தினசரி உணவில் நிறைந்திராவிடில் களைப்பும் வலிமைக் குறைவும் ஏற்படுவது இயற்கையே. போஷணைக் குறைவினால் களைப்பு ஏற்படும் சமயங்களில் டாக்டர்கள் ஹார்லிக்ஸையே சிபார்சு செய்கிறார்கள். ஏனெனில் ஹார்லிக்ஸ் புஷ்டிமிக்க முழு ஆடை நிரம்பிய பசும்பாலோடு கோதுமை, பக்குவப்படுத்தப்பட்ட பார்லி முதலியவைகளின் வலிமைச் சத்துக்களும் கலந்து தயாரிக்கப்படுகிறது. மேலும் சுகாதார முறைப்படி பாட்டில்களில் அடைக்கப்படுவதால் ஹார்லிக்ஸ் உங்களுக்கு புத்தம்புதியதாகவும், சுத்தமாகவும் கிடைக்கிறது.

## ஹார்லிக்ஸ்

கூடுதல் போஷணைக்கும்
ஏராளமான வலிமைக்கும்

HLC 373


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம் — குரும்பசிட்டி, முத்தையா – சுபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் 'தலையாட்டி'யிலுள்ள திருமகள் அழுத்தகத்தில் 1955ஆம் ஆண்டு செப்டெம்பர்மீ 25ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.